பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 27 வெள்ளிக்கிழமை (10.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :196

# பௌத்த அதியுயர் பீடங்கள் அனைத்தும் சேர்ந்து பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்பு!

## 4 மகாநாயக்கர்கள் கையெழுத்திட்டு ஜனாதிபதிக்கு நேற்று அவசர மகஜர்

கண்டி,ஜூன்10

**இலங்கையின் பௌத்தமத அதியுயர் பீடங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து உத்தேச பொதுக்கட்டமைப்புக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. புலிகளுடன் சேர்ந்து அத்தகைய ஏற்பாடுகள் எதனையும் அரசு மேற்கொள்ளக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளன. ஆழிப்பேரலை நிவாரணத்துக்கான வேலைத் திட்டங்கள் எல்லாம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் அங்கீகாரத்துடனேயே முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் அவை கேட்டுள்ளன.**

**பொதுக்கட்டமைப்பு விவகாரம் குறித்து ஜனாதிபதி பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்றும் அவை கோரியுள்ளன. அவ்வாறு செய்யப்படாவிட்டால் அனைத்துப் பிக்குகளையும் ஒன்றுதிரட்டி ஜனாதிபதிக்கு எதிராக மகா கட்டளை ஒன்றைத் தாங்கள் வெளியிடுவார்கள் என்றும் பௌத்த அதியுயர் பீடங்களின் மகாநாயக்கர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இலங்கையின் பௌத்த மத அதியுயர் பீடங்களான சியம் நிக்காயா, ராமக்ஞ்ஞய நிக்காயா, அமரபுர நிக்காயா ஆகியனவே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளன.

பொதுக்கட்டமைப்பு விவகாரம் தொடர்பாக அவை ஜனாதிபதிக்கு அவசர மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளன.

சியம் நிக்காயாவைச் சேர்ந்த மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளான வண. திப்பட்டுவாவே சுமங்கல தேரர், வண.உடுகம புத்திரக்கித்த தேரர், ராமக்ஞ்ஞய நிக்காயா மகாநாயக்கர், வண. வெவெல்தெனியே மேதாலங்கார அமரபுர நிக்காயா மகாநாயக்கர், வண. கவுல்தென ஞானஸ்வர ஆகியோர் நேற்றுக் கண்டியில் கூடிப் பேசி முடிவெடுத்த பின்னர் இந்த மகஜரை அனுப்பிவைத்தனர். நான்கு மகாநாயக்கர்களும் அதில் கையெழுத்திட்டுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சோபித தேரரை வைத்தியசாலையில் சேர்க்க வற்புறுத்து

கண்டி,ஜூன்10

பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டி தலதா மாளிகையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துவரும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண.ஓமல்பே சோபித தேரரின் உடல்நிலை மோசமடைந்துள்ளதால் அவர் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்படவேண்டுமென மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை கண்டி அரசினர் வைத்தியசாலை இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர் எச்.எஸ். விஜேமான்ன, உண்ணாவிரதமிருக்கும் தேரரின் உடல்நிலையைச் சோதித்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த டாக்டர், 55 வயதுடைய தேரரின் உடல்நிலை பலவீனமடைந்திருப்பதாகவும் அவர் ஏற்கனவே இடுப்புவலி தொடர்பான சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவரென்ற கார

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் 12 எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு தருவர்!

### உறுதியுடன் கூறுகின்றார் அமைச்சர் டி.எம்.ஜயரட்ண

கொழும்பு,ஜூன்10

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 12 பேர் தயாராக இருக்கின்றனர். உரியவேளை வரும்போது ஜனாதிபதி அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வார்.

இவ்வாறு ஜனாதிபதிக்கு மிகநெருக்கமானவரும் தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண உறுதியாகத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பிற்கு தீவிர எதிர்ப்புகள் தென்னிலங்கையில் பரவலாகக் கிளம்பியிருக்கின்ற சூழ்நிலையில், அரசின் அடுத்தகட்ட நடவடிக்கை என்னவென்று கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)

## சாகும் வரையில் உண்ணாவிரதம்

## திலீபன் போன்று பிக்குகளும் இருந்தால் அவர்களுக்கும் வரலாற்றில் உரிய இடம்

### அமைச்சர் டி.எம்.ஜயரட்ண கூறுகின்றார்

கொழும்பு,ஜூன்10

சில குறிக்கோள்களுக்காக சாகும்வரை உண்ணாவிரதமிருந்து இறுதிவரை அதற்காகவே தனது உயிரை நீத்தவர் ஒருவர் இலங்கையில் திலீபன்தான். இப்போது உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள பிக்குமாரும் அதேபோல் தியாகங்களைச் செய்தால் அவர்களை நாம் வரலாற்றில் பதிவுசெய்யலாம்.

-இவ்வாறு கூறினார் தபால், தொலைத்தொடர்புகள் மற்றும் மலைநாட்டு அபிவிருத்தி அமைச்சர் டி.எம்.ஜயரட்ண. பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிக்கு ஒருவரின் உடல்நிலை மோசமடைவது குறித்தும், இது தொடர்பான அரசின் கருத்துக் குறித்தும் கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புப் பற்றி எதுவுமே தெரியாமல் அதை ஆதரிப்பது எப்படி?

### ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி

கொழும்பு,ஜூன்10

பொதுக்கட்டமைப்பில் அடங்கியிருக்கும் விடயங்கள் பற்றி ஐக்கிய தேசியக் கட்சி எதுவும் அறிந்திராத நிலையில் அது தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை வெளியிட முடியாது. அதற்காகப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாட்டுடன் - எமது நிலைப்பாட்டை ஒப்பிடவும் முடியாது.

-இவ்வாறு கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய. கொழும்பிலுள்ள எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய கரு ஜயசூரியவிடம் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

பொதுக்கட்டமைப்பு என்பது ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானப் பணிகளை வடக்கு - கிழக்கில் புலிகளும், அரசும் இணைந்து மேற்கொள்வதற்கான ஏற்பாடு என்று எமக்கு மாத்திரமின்றி எல்லோருக்கும் தெரியும்.

ஆனால், இப்பொதுக்கட்டமைப்பில் உள்ள

## அரசைக் கவிழவிடாமல் காப்பாற்ற

## ஜே.வி.பியுடன் நீண்ட நேரம் நேற்றுப் பிரதமர் பேச்சு!

கொழும்பு,ஜூன்10

அரசுக் கூட்டமைப்புக்குள் எழுந்துள்ள நெருக்கடியினால் அரசு கவிழலாம் அல்லது கலைக்கப்படலாம் என்று கருத்துகள் கூறப்படும் நிலையில்-

அரசைப் பாதுகாக்கும் முயற்சியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமாலை ஜே.வி.பி. முக்கியஸ்தர்களுடன் நீண்டநேரம் பேச்சுகளை நடத்தியுள்ளார்.

உத்தேசப் பொதுக்கட்டமைப்புக் குறித்து இந்தப் பேச்சுகளின் போது விரிவாகப் பேசப்பட்டது. பொதுக்கட்டமைப்பை கைச்சாத்திடுவதை ஜனாதிபதி நிறுத்தவேண்டுமென்று இந்தச் சந்திப்பின் போது கூறியிருக்கும் ஜே.வி.பி. அப்படி எதுவும் இடம்பெறாத பட்சத்தில் அரசிலிருந்து விலகி மக்களுக்கு உண்மைநிலையை எடுத்துரைப்பது தவிர்க்க முடியாதது என்றும் திட்டவட்டமாக கூறிவிட்டது என அறியவந்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிக்கு எம்.பியின் உடல்நிலை மோசம் அரசுக்கு 24 மணிநேரக் கெடுவிதிப்பு

கொழும்பு,ஜூன்10

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டியில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண.ஓமல்பே சோபித தேரரின் உடல்நிலை மோசமான நிலைமைக்குச் சென்றுள்ளதையடுத்து, இந்தப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான அரசின் நிலைப்பாடு அடுத்த 24 மணி நேரத்திற்குள் அறிவிக்கப்படவேண்டுமென்று ஜாதிக ஹெல உறுமய காலக்கெடு விதித்துள்ளது.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக கண்டி தலதா மாளிகையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வண. ஓமல்பே சோபித தேரரின் நிலை மோசமாகியுள்ளதையடுத்து ஜாதிக ஹெல உறுமய அவசர செய்தியாளர் மாநாடொன்றை நேற்றுக் கொழும்பில் நடத்தியது.

தம்ம விஜய மன்றத்தில் இடம்பெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான வண.அத்துரெலியே ரத்ன தேரர், வண.கொட்டபொல அமரகீர்த்தி தேரர் உட்படப் பலரும் கலந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் மீது துப்பாக்கிச் சூடு அவருட்பட மூவர் காயம்; பொதுமகன் பலி!

### நகைக்கடைக்குச் சென்ற சமயம் செங்கலடியில் சம்பவம்


மட்டக்களப்பு,ஜூன்10

நகை வாங்குவதற்காகப் படையினரின் பாதுகாப்புடன் சென்ற ஈ.பி.டி.பியின் செங்கலடிப் பிரதேச சபையின் உறுப்பினர் மீது இனந்தெரியாத துப்பாக்கிதாரி தாக்குதல் நடத்தியிருக்கிறார். இந்தச் சம்பவத்தில் படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மூவர் காயமடைந்தனர். குறிப்பிட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினரும், இராணுவக் கோப்ரல் ஒருவரும் பொலீஸ் கான்ஸ்டபிளுமே சம்பவத்தில் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுப்பகல் 11 மணிக்கு செங்கலடி பிரதான வீதியில் இடம்பெற்றது. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர் கருணாமூர்த்தி (வயது-45) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் ஓட்டோச் சாரதியாவார்

செங்கலடிப் பிரதேச சபை ஈ.பி.டி.பி உறுப்பினரான ஈழமாறனை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியங்கள் தொடர்பான ஓவிய மதிப்பீட்டு அரங்கு நேற்றுப் பிற்பகல் யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பொதுச்சுடரினை தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கிருஷ்ணா ஏற்றுவதையும் ஓவியர் புகழேந்தி உரையாற்றுவதையும் சாவதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் ஓவியர் புகழேந்திக்கு வாழ்த்து மடல் மற்றும் பரிசினை வழங்கிக் கௌரவிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)

# தமிழக ஓவியர் புகழேந்திக்கு யாழ். பல்கலையில் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜுன் 10

தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியங்கள் தொடர்பான ஓவிய மதிப்பீட்டு அரங்கு நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு சர்வதேச மாணவர் பேரவையின் துணை இணைப்பாளர் குகன தலைமைவகித்தார்.

நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட மகளிர் அரசியல் பிரிவுக் பொறுப்பாளர் கலைவிழி, தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் கிருஷ்ணா, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுபபாளர் கண்ணன், யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் இ.தங்கராஜா ஆகியோர் ஏற்றினர்.

ஓவிய மதிப்பீட்டு உரையினை கலாநிதி சிதம்பரநாதனும் வாழ்த்துரைகளை சமூக அரசறிவியல் துறைப் பேராசிரியர் எஸ்.சண்முகலிங்கன், கலைப்பீடாதிபதி இரா. சிவச்சந்திரன், யாழ். மாவட்ட அரசியற் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து ஓவியர் புகழேந்தி வாழ்த்துமடல் மற்றும் நினைவுப்பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

வாழ்த்து மடலையும் பரிசினையும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுபபாளர் கண்ணன் ஓவியர் புகழேந்தியிடம் வழங்கினார்.

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவப் பிரதிநிதி ஒருவரும் ஓவியருக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

ஓவியர் புகழேந்தி ஏற்புரை நிகழ்த்தினார்

புகழேந்தியின் ஓவியக்கண்காட்சி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலும் புதன் கிழமை வடமராட்சியிலும் நேற்று வியாழக கிழமை தென்மராட்சியிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது

(த-7)

# சுதந்திரபுரம் படுகொலைகளின் நினைவுதினம் இன்று அனுஷ்டிப்பு

புகுடியிருப்பு, ஜுன் 10

சுதந்திரபுரத்தில் படுகொலை செய்யப்பட்டோர் மற்றும் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் லெப்டினன்ட் கேணல் அன்பு (அம்மா அண்ணை) ஆகியோரின் 7ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் இன்று மாலை 5 மணிக்கு சுதந்திரபுரம் சந்தியில் நடைபெறவுள்ளது.

கடந்த 1998ஆம் ஆண்டு இதேதினத்தில் சுதந்திரபுரம் பகுதியில் ஸ்ரீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் பொதுமக்களின் குடியிருப்புகள் மீது சரமாரியாக தாக்குதல்களை நடத்தியதில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

அந்த அப்பாவிப் பொதுமக்கள் பலியான தினமே வருடாவருடம் சுதந்திரபுரம் படுகொலைத்தினம் என்ற பெயரில் நினைவுகூறப்பட்டுவருகின்றது.

பொதுச்சுடர் ஏற்றல், தேசியக் கொடி ஏற்றல், சுதந்திரபுரத்தில் கொலையுண்டவாகள் மற்றும் லெப்.கேணல் அன்பு ஆகியோரது திருவுருவப் படங்களுக்கான ஈகச் சுடரகள் ஏற்றுதல் என்பவற்றுடன் நினைவுரைகளும் இடம்பெறும்.

(த-353-410)

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜுன் 10

அச்சுவேலி சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தால் வல்லைச் சந்தியில் அமைக்கப்படவுள்ள சிற்றூர்தித் தரிப்பிடத்திற்கும் அலுவலத்திற்குமான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் சி.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்திற்கான அடிக்கல்லை நட்டுவைபபார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி.பத்மநாதன், கோப்பாய் பிரதேச செயலர் செந்தில்நந்தனன், அரசியல்துறையைச் சேர்ந்த கண்ணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-11-203)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜுன் 10

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலகம் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு ஆசிரியர் இரா.ஈஸ்வரன் 'நானும் நீயும்' என்னும் தலைபபில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஒ-203)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜுன் 10

யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்கள் பணிமனையின் ஏற்பாட்டில் கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புத்தளம் இப்னுபதூதா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலம் குறித்து ஆராயப்படும் என றும் -

இதில் இரு மாவட்டங்களையும் சேர்ந்த முஸ்லிம் மக்களையும் ஆர்வமுள்ளோரையும் கலந்துகொள்ளுமாறும் மக்கள் பணிமனை கேட்டுள்ளது. (ஒ-202)

★ ★ ★

சாவகச்சேரி, ஜுன் 10

சாவகச்சேரி கண்டுவில் பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் மெய்த்திறன் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பராமரிப்பு நிலைய மைதானத்தில் நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுளளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்துகொள்வார். (ஒ-31)

★ ★ ★

குடத்தனை, ஜுன் 10

துன்னாலை வடக்கு காரைக்கூடல் ஞானவைரவர் ஆலய மஹாகும்பாபிசேகம் இன்று நடைபெறவுள்ளது. (ஒ-78)

★ ★ ★

குடத்தனை, ஜுன் 10

தென்புலோலி காந்தியூர் வேம்படி வீரபத்திரர் ஆலய மஹாகும்பாபிசேகம் இன்று நடைபெறவுள்ளது. (ஒ-78)

★ ★ ★

முழங்காவில், ஜுன் 10

வேரவில் துந்துயில் ஐயனார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. இதில் இன்று வெள்ளிப் பள்ளத்து வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வழிபாடு நடைபெற்று இரவு வெற்றிலை மடை இடம்பெறும். நாளை ஐயனார் ஆலயத்தில் இரவு பொங்கல் இடம்பெறும். (ஒ-323)

★ ★ ★

காரைநகர், ஜுன் 10

காரைநகர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் காரைநகர் பல நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முன்மொழிவுகள், கருத்துப் பரிமாறல், சிறப்புரை என்பன இடம்பெறவுள்ளன.

(ஒ-73)

# கலைமாணி பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜுன் 10

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகின் கலைமாணி பகுதி II - 2001 பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த திங்கட்கிழமை வெளியாகின.

பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:-

ஆறுமுகம் சுபாஸ்கரன், சிவசாமி தயாபரன், வைரமுத்து சுபாசினி, மகேஸ்வரநாதன் விஜயந்தி, சக்திவேல் ஜெயந்தி, கனகரட்ணம் கலைச்செல்வி, தங்கராசா மோகன், கனகரட்ணம் சசிகலா, குழந்தை வடிவேல் கலைவதனி, சங்கரப்பிள்ளை சுவர்ணலதா, செல்வச்சந்திரன் தாரணி, மதுசூதனன் மதியரசி, நற்குணராஜா அகிலன், கோபால் கருகாம்பதியம், அருளானந்தம் ஞானசுலோஜனா, செல்வநாயகம் கௌரி, ஆழ்வார்ப்பிள்ளை ஜானகி, திருமதி கவிதா சிவபாலன், சுப்பிரமணியம் மலர்விழி, கிட்ணப்பிள்ளை நந்தினி, பரராஜசேகரம் பிரதீபன், சுந்தரலிங்கம் பூங்குழலி, திருமதி சரளா சந்திரன், திருமதி வனிதா குமரேசமூர்த்தி, திருமதி சர்மிலா சிவநாதன், சிவகாந்தராஜன் சிவாஞ்சலி, ராஜேந்திரம் செசிலியன் சுகந்தராஜ், கிருஷ்ணசாமி சுமித்ரா, செல்வராசா தமிழ்ப்பிரியா, கமலநாதன் தவமலர், கங்காதரன் திருமகள், வர்ணகுலசிங்கம் வான்மதி, தர்மலிங்கம் வித்தியாதரன், கதிரவேலு சியாமலா, தம்பிப்பிள்ளை தயாழினி, தங்கவேலு லோகேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராஜா சுரேஸ், செபமாலை செறின் வேஜினியா, நடராஜா விமலகுமார், திருநாவுக்கரசு தில்லைரஞ்ஞனி, ரட்ணமணி ராகினி, வேலுப்பிள்ளை அன்பழகன், செல்லையா பத்மரதி, மணிவாசகம் சுகாசினி. (ஒ-12-202)

(மிகுதி நாளைய உதயனில்)

# புற்றுநோய் மருத்துவமனையில் நேற்று முதல் சிகிச்சை ஆரம்பம்

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைகள் நேற்று ஆரம்பமாகின.

கடந்த 1990ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக செயலிழந்து போன இந்த நிலையம் புனரமைக்கப்பட்டு 'கோபால்ற்' இயந்திரங்கள் பொருத்தப்பட்டு திறக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சிகிச்சைகள் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகின.

அமெரிக்காவில் இருந்து வருகைதந்துள்ள கதிர்வீச்சு சிகிச்சை பௌதிக நிபுணர் பேராசிரியர் எஸ்.சுந்தரலிங்கத்தின் மேற்பார்வையில் உள்ளூர் கதிர்வீச்சு சிகிச்சை பௌதிகவியலாளர்களால் கதிர்வீச்சு சிகிச்சை நடத்தப்படுகின்றது. (ஒ-3)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜுன் 10

இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச அலுவலகத்தினரால் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், நாளை சனிக்கிழமை கீழ்க்குறிப்பிடப்பட்ட இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணப்பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், மருத்துவப்பீட பிரதேசம், பொற்பதி, சங்குவேலி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைபட்டிருக்கும். காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இந்த மின்தடை அமுலில் இருககும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-204)




# கனரக வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் பரிதாப மரணம்

## புதுக்குடியிருப்பில் நேற்றுச் சம்பவம்

புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதியில் நேற்று கனரகவாகனம் ஒன்றும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்றவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

புதுக்குடியிருப்பு கோம்பாவில் 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையாரான கந்தசாமி அரிச்சந்திரன் (வயது-45) என்ற குடும்பஸ்தரே பலியானவராவார்.

வீதித்திருத்தப் பணிகளில் ஈடுபட்டு வரும் கனரக வாகனம் ஒன்றே இந்த விபத்தில் சம்பந்தப்பட்டதென்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வாகனத்தின் சாரதியைக் கைது செய்த காவல்துறையினர் வாகனத்தையும் காவல்துறை அலுவலக நிலையத்திக்கு எடுத்துச்சென்றனர். உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் புதுக்குடியிருப்பு கிராமிய வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு மரணவிசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது

(த-353-410)

## கைதடியில் கல்விக்கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜுன் 10

கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய கல்விக்கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் ஆரம்பமாகவுள்ளது (ஐ)

# REQUEST FOR PROPOSAL

**Hiring of Off - road-Vehicles**

**Closing Date: 14th of June 2005**

The Sub-Delegation of the International Committee of the Red Cross (ICRC) in Kilinochchi is searching for companies and individuals willing to rent off-road vehicles for use in its assistance programmes.

Type of vehicles requested

a) Station wagon (e.g. Toyota Landcruiser Hard Top)
b) Pickup
c) Minibus (e.g. Toyota Hiace)

**Rental period**

**01st of July 2005 - open ended (several months)**

Rental conditions

all Inclusive (driver, fuel, oil, maintenance costs, insurance) possibility to affix Red Cross emblem on the vehicle availability of replacement vehicle in case of breakdown owner's liability in the event of theft of goods, accident or damage

Rental of the vehicle on an unlimited mileage basis;

Wages of the driver (if the vehicle is to be rented with a driver)

Type of Insurance for the vehicle and payment of insurance premiums;

Responsibility for maintenance costs and in all cases, oil and fuel;

Interested parties are invited to submit their bids in a sealed envelope until 14th of June 2005 to the following address;

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
**Subdelegation Kilinochchi,**
**Iranaimadhu Junction,**
**Kilinochchi.**
Phone: 071237 56 97 / 071 229 66 80

(C/43280)(26)

solidar · ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. · Swiss Labour Assistance SAH · Norwegian People's Aid

The Solidar Group - ASB (Arbeiter Samariter Bund), NPA (Norwegian People's Aid) and SAH (Swiss Labour Assistance) - is now recruiting experienced and qualified engineers for Phase III Reconstruction activity in the tsunami affected districts of Jaffna (Vadamarachchi East) and Mulaitivu. Solidar is committed to building more than 1,000 permanent homes and a range of associated community infrastructure, including fishing communities, playgrounds, preschools, community centres, water & sanitation and road building. Based in Kilinochchi, Solidar is now recruiting the following positions:

## Chief Engineer

Responsible for the overall management of SOLIDAR construction activity. Working in close collaboration with the Programme Manager and senior management, the Chief Engineer will be required to lead, guide and manage all aspects of the planning, development and implementation of SOLIDAR Phase III reconstruction activity in the Wanni

Main duties include: leading the development planning and coordinating of reconstruction activities in eight villages, managing and supervision of project engineers; ensure that monitoring, quality assurance and reporting systems are in place and have been followed; draft and evaluate architectural designs and manage the construction activity in a timely manner according to quality standards set by SOLIDAR.

The successfiil candidate for this key, challenging position should possess advanced engineering qualifications and have significant experience and a proven track record of managing rehabilitation construction projects. Knowledge of English and Tamil Languages is essential.

## Senior Engineers

Working closely with the Chief Engineer, this position is responsible for the day-to-day management of the construction programme and field activity. Main activities include: including the coordination and supervision of project engineers, technical specialists, contractors and building site managers; the management and supervision of site offices and stores; monitoring resource needs and ensure accurate records of materials delivery, storage and use; effective coordination with coordination bodies; timely supply of materials.

This person should have appropriate qualifications in engineering and previous experience of running and managing construction projects. Knowledge of English and Tamil Languages is essential.

## Project Engineers

Experienced Project Engineers are required to manage and implement housing and community construction projects in coordination with Senior Engineers and Building currently exist for qualified personnel in the following areas:

- Housing Construction
- Road Construction
- Construction of Public Buildings
- Water & Sanitation

Interested candidates should submit a CV and Cover Letter by email to: stevedurrant2003@yahoo.co.uk.

A lternatively, submissions may be sent by mail to:

**Mr. Florian Meyer**
**Programme Manager Construction,**
**ASB/SOLIDAR Office,**
**156, Jaffna Road,**
**Paranthan, Kilinochchi.**

**Ms. Harshi Gunawardana,**
**SOLIDAR Administration Coordinator,**
**NPA/SOLIDAR Office,**
**l5/2, Tickell Road, Colombo 08.**

(C/43320)

# Vacancy - Immediate Drivers

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for highly competent, experienced **field Drivers,**

The candidate should have the following **qualifications:**

- Minimum of 3 years of driving experience, whereof three years with 4 Wheel-drive
- Excellent driving skills with a valid Sri Lankan driving licence (class A)
- Working experience with an NGO or an international organization
- Ability to hold basic conversations in English
- Mechanical knowledge will be an asset.

**Core responsibilities** include:

- Safe operation of a 4-wheel drive vehicle in all circumstances
- Carry-out small-scale maintenance works
- Accompanies expatriates during field trips
- Acts as a translator to expatriates whilst working in the field; interpret between the delegate and interlocutors.
- Ensures security of goods and persons transported in the vehicle at all times

**Employment Conditions.**

According to ICRC's National Scale and employment conditions

Suitable candidates are invited to submit their complete CVs (incl. photo copy of valid driving licence) to ICRC's office in Kilinochchi until **Wednesday, 15th of June 2005.** Qualified candidates will be contacted for interviews,

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
**Subdelegation Kilinochchi,**
**Iranaimadhu Junction,**
**Kilinochchi.**
Phone: 071 237 56 97 / 071 229 66 80

(C/43279)(26)

# REQUEST FOR PROPOSAL

**Wall-Construction works at Palai Hospital**

**Closing Date. 14th June 2005**

The Sub-Delegation of the International Committee of the Red Cross (ICRC) in Kilinochchi is searching for construction companies, willing to contract for perimeter wall construction at Palai Hospital.

**Bill of Quantities**

| | |
|---|---|
| Purpose of Wall: | Perimeter wall for Palai Hospital. |
| Quality of walls: | Full-height concrete-block work |
| Foundation Dimensions: | Length: 1655 ft / height: 2 ft / width: 1 ft |
| Wall Dimensions: | Length: 1655 ft / height: 4.5 ft |
| Reinforcement | Reinforced Concrete Posts will be constructed at intervals of 10 feet |

**Structure & Detail of the Proposal**

- Project start & end dates (plus duration)
- The proposal has to mention indication of guarantees
- All price indication are to denominated in local currency (LKR)
- Payment schedule (prepayments etc.)

Interested Companies and individuals are invited to submit their bids in a sealed envelope until **14th of June 2005** to the following address:

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi,
Logistics Department,
Iranaimadhu Junction,
Kilinochchi.
Phone: 071 237 56 97 / 071229 66 80

(C/43278)(26)

## பகுதி நேர மருத்துவ தாதி

யாழ். நகரின் மத்தியில் நிறுவப்படவிருக்கும் குடும்ப வைத்திய நிறுவனத்திற்குக் கிழமை ஒன்றுக்கு 20 மணிநேரம் (5 நாள்கள் X 4 மணி) வேலை செய்யத் தாதி ஒருவர் தேவை.

மேற்படிப்பில் ஈடுபடுவதில் ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

அரச சேவை ஊழியர் சம்பளத்திலும் கூடுதலாக வழங்கப்படும். மேலதிக வேலை நேர வாய்ப்பு தேவைப்படின் வழங்கப்படும்.

**வேலை ஆரம்ப திகதி: 01-09-2005**

**இல.125, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

E.mail: admin @ miot.org.uk

(C/43292) (21-14-15)


## எஸ்.பி. கிருஷ்ணனின் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன்10

இலக்கிய நண்பர்கள் நடத்தும் எஸ்.பி. கிருஷ்ணனின் 'இனி வசந்த காலம்' என்னும் சிறுகதை நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'நமது ஈழநாடு' பத்திரிகை ஆசிரியர் எஸ். இராதையன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வாழ்த்துரைகளை சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம், யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா ஆகியோரும் -

வெளியீட்டுரையை கலை, பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மு.வளநாடனும் ஆய்வுரைகளை கவிஞர் நல்லை அமிழ்தன், எழுத்தாளர் யோசேப் பாலா ஆகியோரும் நிகழ்த்துவர்.

நூலின் முதற் பிரதியை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் பெற்றுக் கொள்வார்.

(3-202-30)


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது



நந்தாவில், கொக்குவிலைச் சேர்ந்த

**திருமதி**

**சரஸ்வதி செல்வராசா**

அவர்களின் 10-06-2005 வெள்ளிக் கிழமை அன்று நடைபெறவிருந்த 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

★ இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு நாம் மிக மனம் வருந்துகின்றோம்.

நந்தாவில்,
கொக்குவில். (36360)(21-14-15)

தகவல்:
குடும்பத்தினர்.

## 50 ஆவது திருமண ஆண்டு




### ஸ்ரீ முருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகள் தம்பதிகள்

10-06-1955 ஆம் ஆண்டு எல்லாம்வல்ல முருகன் அருளால் இல்லறம் என்னும் நல்லற வாழ்க்கையில் இணைந்து கொண்டார்கள். வாழ்க்கையில் ஏற்பட்ட இன்பத்திலும், துன்பத்திலும் இணைந்து இனிதே வாழ்ந்தார்கள் 10.06.2005 இன்று 50 ஆவது திருமண ஆண்டு நிறைவுநாளை மானிப்பாயிலுள்ள ஸ்ரீமுருகன் அருள் நிலையத்தில் கொண்டாடும் பெற்றோரை அன்றும் இன்றும் என்றும் இனிதே வாழ முருகன் அருள்வேண்டி அவர்களை வாழ்த்துகின்றோம்.

**பிள்ளைகள்**
த.றஞ்சினிதேவி (ஜேர்மனி)
மா.மனோகரன் (மானிப்பாய்)
ச.யமுனா (ஜேர்மனி)
மா.சிறிகரன் (பிரான்ஸ்)

**மருமக்கள்**
A.S.தர்மசீலன் (ஜேர்மனி)
ம.ஞானேஸ்வரி (மானிப்பாய்)
ந.சத்தியசீலன் (ஜேர்மனி)
S.கௌசலா(பிரான்ஸ்)

**பேரப்பிள்ளைகள்**
றொனி, யூலி, தமறா, சமுத்தி, கஜன், மதுரா, நர்த்தனா, கேராம்

(36252) (56-13-34)

லோட்டன் வீதி,
மார்க்கண்டேயர் லேன், மானிப்பாய்.

குடும்பத்தினர்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**மலர்வு**
03 - 04 - 1935

**உதிர்வு**
04 - 06 - 2003

**திருமதி**
**கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி**

மண்ணுலகில் நாம் நலமே வாழ
வழிகாட்டிய எம் தாயே!
உங்கள் நலத்தை எம்மால் காக்க
முடியாத பாவிகள் அம்மா
ஏணிப்படியில் ஏறிவரும் போது
எம்மை பார்த்திருக்காது
எங்கே அம்மா ஓடி மறைந்தீர்?
தினம் தினம் உங்கள் நினைவால்
வாடுகின்றோம் அம்மா!

என்றும் உங்கள் பிரிவால் வாடும்:
தாய், கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"புவனவாசா",
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (C\43290)(53-14-11)


கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக்கழகம் நடாத்தும்

✪ 19வது மாபெரும் திருவள்ளுவர் நினைவு விழாவும், ✪

விளையாட்டுப்போட்டியும்.

காலம்: 19.06.2005
இடம்: கருணையம்பதி ச்.ச.நிலைய முன்றல்



**போட்டிகள்**

காலை நிகழ்சிகள்
மரதன் ஓட்டம் (ஆண்கள்) 10மைல்
சையிக்கிள் ஓட்டம் (பெண்கள்) 08மைல்

மாலை நிகழ்சிகள்
கயிறு இழுத்தல் (குழு.10பேர்)
வழுக்குமரம் ஏறுதல்
மெதுவான சையிக்கிள் ஓட்டம்
தலையணைச்சமர், மற்றும் பாடசாலை
மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும்.

போட்டியில் பங்குபற்றுவோர் 15.06.2005க்கு முன் விண்ணப்பங்களை கீழ் வரும் முகவரிக்கு அனுப்பவும்

செயலாளர்
கருணையம்பதி ச.ச.நிலையம்
கரணவாய் மத்தி,
கரவெட்டி.


## நெஞ்சைவிட்டகலாத நினைவுகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**மண்ணில்**
13
01
1964



**விண்ணில்**
20
06
2004





**திருமதி**
**வசந்தராணி சிவபாலசுப்பிரமணியம்**

"ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மாவுக்கு இணையாகுமா?"

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
ஆலமரம் போல் எம்மை ஆதரித்த அன்னையே!
நேசத்துடன் வளர்த்தெடுத்த பாசமுள்ள எம் அம்மாவே!
நீர் காற்றிலா கலந்து போனீர்? உம் கண்ணியம் வாழும் என்றும்!
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

மாதகல் வடக்கு.
(36361)(52-14-19)

பிரிவால் துயருறும் :
கணவர், பிள்ளைகள், குடும்பத்தினர்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## சந்திரிகா சாதித்தது என்ன?

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கையில் கையெழுத்திடும் அதேசமயத்தில், நாடாளுமன்றத்தையும் கலைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இவ்விவகாரம் தொடர்பாகத் தேர்தல் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருடனும் ஜனாதிபதி குமாரதுங்க விரிவாக ஆராய்ந்திருக்கிறார் என்றும் கூறப்படுகின்றது.

ஆக, பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் தனது திட்டத்தை ஆளும் தமது கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சிகளிடம் 'விற்க' முடியாத ஜனாதிபதி, தமது கூட்டமைப்பு அரசிலிருந்து 'வெற்றிகரமாக'ப் பின்வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார் என்பது, அவரின் இந்த நடவடிக்கைகளால் தெட்டத்தெளிவாகப் போகின்றது.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதி நாட்டுமக்களுக்கு எடுத்துரைத்த கருத்துகள் இந்தச் சந்தர்ப்பத்தில் நோக்கற்பாலவை.

✳ பொதுக்கட்டமைப்பு, வெறும் சிபார்சுகளை வழங்கும் ஓர் ஏற்பாடே தவிர, அதற்கு வேறு பெரிய அதிகாரம் ஏதுமில்லை.

✳ அதன் செயற்பாட்டு ஆயுட்காலம் ஆக ஒரு வருடம் மட்டுமே.

✳ அதுவும், வடக்கு - கிழக்கில் கடற்கரையிலிருந்து 2 கிலோமீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தின் அபிவிருத்தி, புனரமைப்புப் பணிகளைக் கண்காணித்து உரிய சிபார்சுகளைச் செய்வது மட்டுமே அதன் பணியாகும்.

✳ ஏற்கனவே வடக்கு - கிழக்கில், குறிப்பாகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், அரசின் நடவடிக்கைகள் ஒரு வழிமுறையில் இயங்கிவருகின்றன. அதுவே இப்போது பொதுக்கட்டமைப்பு முறையின் மூலமும் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. புதிதாக எதுவும் வழங்கப்படவில்லை.

- இப்படி எல்லாம் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார். அதுமட்டுமல்ல, இந்தப் பொதுக்கட்டமைப்பு ஏற்பாடு நாட்டின் அரசமைப்புக்கு முரணானதல்ல. அரசமைப்பு ஏற்பாடுகளை மீறிச் செய்யப்படுவதுமல்ல. அரசமைப்புக்கு உட் பட்டே இது செய்யப்பட்டாலும், இதனை உருவாக்குவதற்காக விசேட சட்டங்கள் கூட ஆக்கப்படவில்லை. இருக்கின்ற சட்டங்களுக்குள் அவற்றுக்கு அமைவாகவே இது செய்யப்படப்போகின்றது.

அத்தோடு, மறுதரப்பில் புலிகள் ஏற்றுக்கொண்டார்களோ இல்லையோ அரசுத் தரப்பினரும், ஜனாதிபதியும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக வேறும் சில விடயங்களையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

✳ *உத்தேசப் பொதுக்கட்டமைப்பு ஒன்று அல்லது பல அமைச்சுகளின் கீழ்தான் செயற்படப்போகின்றது. அதனால் அது நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்லும் அமைப்பாகும்.*

✳ *பொதுக்கட்டமைப்பை ஏற்றுக்கொண்டதன் மூலம் புலிகள், இலங்கை அரசினது இறைமையை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.*

✳ *சர்வதேச அழுத்தம் மற்றும் மக்களின் நெருக்கு வாரம் ஆகியவை காரணமாக வேறுவழியின்றி விடுதலைப் புலிகள் பொதுக்கட்டமைப்பை ஏற்கும் கட்டாயத்துக்குத் தள் ளப்பட்டு அந்த நிலைக்கு இறங்கி வந்துள்ளனர்.*

- இவையெல்லாம் ஜனாதிபதி சந்திரிகாவே தமது வாய் மூலம் கூறிய விடயங்கள்; புதிய அம்சங்கள் அல்ல.

இப்படிப்பட்ட ஒரு பொதுக்கட்டமைப்பபை உருவாக்கத்தான் அரசுக் கூட்டமைப்புக்குள் இவ்வளவு எதிர்ப்பு. கூட்டரசையே கவிழ்க்கும் - அல்லது கலைக்கும் - அளவுக்கு விரோதம்.

ஒன்றுமில்லாத ஒன்று என ஜனாதிபதி கூறும் பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டையே செய்யவிடாமல் தடுக்கும் அவரின் அரசுக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி., இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வை எட்டுவதற்கான அமைதி முயற்சிகளில் ஆக்கபூர்வமான ஒரு சிறிய நடவடிக்கையையாவது எடுப்பதற்கு இந்த அரசை அனுமதித்திருக்குமா? அனுமதித்திருக்காது. எதிர்காலத்தில் அனுமதிக்கவும்மாட்டாது என்பது அரசியலில் அரிச்சுவடி படிக்காதவர்களுக்குக்கூட புரியும் விடயம்.

ஆக, அமைதி முயற்சிகளுக்கு ஒரேயடியாக முட்டுக்கட்டை போடக்கூடிய இத்தகைய பேரினவாதிகளைத் தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்சிப் பீடத்துக்குக் கொண்டுவந்த தமது நடவடிக்கை மூலம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சாதித்திருப்பது என்ன?

இரண்டு தசாப்த காலயுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புலிகளுடன் செய்து, அமைதி முயற்சி தொடர்பாகப் புலிகளுடன் ஆறு சுற்றுப் பேச்சு நடத்தி, இடைக்கால ஏற்பாடு தொடர்பாகப் புலிகள் தரப்பின் ஆலோசனையையும் பெற்றுக்கொள்ளும் நிலைக்கு முன்னேறிய பிரதமர் ரணிலின் அரசிடமிருந்து முக்கிய அமைச்சுகளை, தமது அதிகாரங்களைக் கொண்டு பறித்தார் ஜனாதிபதி. அதன்மூலம் அமைதி முயற்சிகளை முடக்கினார். பின்னர் அந்த அரசை நான்கு ஆண்டுகள் முன்னதாகவே வீட்டுக்கு அனுப்பினார். அதைத் தொடர்ந்து பேரினவாதிகளையும் சேர்த்துக்கொண்டு நாடாளுமன்ற ஆட்சியையும் தாமே கைப்பற்றினார். இப்போது அதே பேரினவாதிகளிடம் மூக்குடைபட்டுக் கிடக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்.

இந்த நடவடிக்கைகள் எல்லாவற்றின் ஊடாக அவர் சாதித்தது என்ன? அவற்றின் பெறுபேறு என்ன?

அமைதி முயற்சிகளை சுமார் ஒன்றே முக்கால் வருடம் தள்ளிப்போடவைத்து, சமாதான எத்தனங்களுக்குப் பின்னடைவை உருவாக்கியுள்ளார். இலங்கை அரசு - புலிகள் ஆகிய சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுக்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கையைச் சிதறடிக்கவைத்து, நம்பிக்கையீனத்தையும், சந்தேகத்தையும் வலுப்படுத்தியுள்ளார். அமைதி முயற்சிகளின்பால் சிறுபான்மை இனத்தவருக்கு இருக்கும் சந்தேகத்தை மேலும் உறுதியாக்கினார். தமிழர்களுக்கு எதிரான பௌத்த சிங்களப் பேரினவாதத்தை உரமூட்டி ஸ்திரப்படுத்தியிருக்கின்றார். இவை எல்லாவற்றுக்கும் மேலாக யுத்த நிறுத்தத்துக்கு வழிசெய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தையே கேள்விக்கு உள்ளாக்கி, மீள யுத்தம் வெடிப்பதற்கான பதற்ற நிலையை நிலைநிறுத்தியிருக்கின்றார்.

நிறைவேற்று அதிகாரத்தை வைத்துக்கொண்டு ஜனாதிபதி ஆடிய - ஆடுகின்ற - 'கூத்து'களால் அவர் சாதித்தவை இவைதான்.

# மாணவர் அனுமதிக்கு பணம் கோரும் பாடசாலைகள் குறித்துத் தெரிவியுங்கள்

## தமிழீழ மாணவர் ஒன்றிய யாழ். பொறுப்பாளர் அறிவிப்பு

—பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்குப் பணம் கோரும் பாடசாலைகள் குறித்து பெற்றோர்கள் தமக்கு அறியத்தருமாறு தமிழீழ மாணவர் ஒன்றிய யாழ். மாவட்டப் பொறுப்பாளர் எஸ்.கிருஷ்ணா கேட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் அனுமதிகோரும் மாணவர்களிடம் அபிவிருத்தி என்ற பெயரில் பெருந்தொகையான பணம் வசூலிக்கப்படுகின்றது. குறிப்பாக நகரப் பகுதிப் பாடசாலைகளில் இது அதிகம் இடம்பெறுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட பல பெற்றோர்களும் மாணவர்களும் எம்மிடம் முறையிட்டுள்ளனர்.

எனவே, மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இதனை ஆராய்வதற்காக சம்பந்தப்பட்ட அதிபர்களுடன் நேரில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம்.

யுத்தத்தால் குடாநாட்டு மாணவர்களின் கல்வி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது அவர்கள் அதிலிருந்து மீண்டு தமது கல்வியைத் தொடர்கின்றார்கள்.

இந்தநிலையில், அவர்களைப் பாடசாலையில் அனுமதிப்பதற்கு அபிவிருத்தி என்ற பெயரில் பணம் வசூலிப்பது உகந்த விடயமல்ல என்று எமது அமைப்பு கருதுகிறது.

எனவே, இதுதொடர்பாக பாடசாலையில் அனுமதிப்பதற்குப் பணம் கேட்கும் பாடசாலை குறித்து பெற்றோர்கள் எமக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார் அவர். (ஓ-13)

### கொழும்பில் கொல்லப்பட்ட

# இளைஞர்களின் நல்லடக்கத்தையொட்டி நாளை குருநகரில் துக்கதினம்

குருநகர்.ஜீன்10

கொழும்பு கொட்டாஞ்சேனையில் கடந்த 5ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட குருநகரைச் சேர்ந்த இரு இளைஞர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அவர்களது இறுதிச்சடங்கு நடைபெறவுள்ள தினமான நாளை சனிக்கிழமை குருநகரில் துக்க தினம் அனுஷ் டிக்கப்படவேண்டும் என குருநகர் பொது அமைப்புகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட அரியராசா குருதாஸ், தேவதாஸ் சுரேஸ் ஆகியோரின் பூதவுடல்கள் தற்போது அவர்களது இல்லங்களில் வைக்கப்பட்டுள்ளன. அவை நாளை பிற்பகல் 2.30 மணிக்கு அவர்களது இல்லங்களிலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு குருநகர் கலை அரங்க முன்றிலில் விசேட பந்தலில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அஞ்சலி நிறைவில் இவ்விரு இளைஞர்களது படுகொலை தொடர்பாக நீதியான விசாரணையை நடத்தி கொலையாளிகளைக் கண்டுபிடிக்குமாறு கோரி ஜனாதிபதியிடமும், நீதிக்கும் சமாதானத்துக்குமான அமைப்பிடமும் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன. ஜனாதிபதிக்கான மகஜர் நேரடியாகத் தபாலில் சேர்க்கப்படும். நீதிக்கும் சமாதானத்துக்குமான அமைப்பிற்கான மகஜர் அதன் பிரதிநிதியிடம் அஞ்சலி நிகழ்வில் ஒப்படைக்கப்படும். இதன் பிரதி யாழ். அரச அதிபரிடமும் கையளிக்கப்படும். குருநகர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இத்தகவல்களைத் தெரிவித்தனர்.

அஞ்சலி நிகழ்வினையும் பொதுக் கூட்டத்தையும் தொடர்ந்து குருநகர் மவுண்காமல் வீதி மற்றும் குருநகர் 6ஆம் குறுக்கு வீதி ஆகியவற்றில் பூதவுடல்கள் குருநகர் இளைஞர்களின் அஞ்சலிக்கு வைக்கப்படும். தொடர்ந்து குருநகர் வீதிகளூடாக எடுத்துச்செல்லப்பட்டு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல்கள் அடக்கம் செய்யப்படும்.

இளைஞர்களின் பூதவுடல்கள் நல்லடக்கம் செய்யப்படும் தினமான நாளை, குருநகரிலுள்ள வியாபார நிலையங்களைப் பூட்டியும், குருநகர் மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாமலும் கறுப்புப் பட்டிகள் அணிந்து அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு குருநகர் பொது அமைப்புகள் குருநகரிலுள்ள வர்த்தகர்களையும், கடற்றொழிலாளர்களையும் பொதுமக்களையும் கோரியுள்ளன. (ஓ-31)

# கைத்தொழில் அபிவிருத்திக்கு யாழ். மாவட்டத்தில் நடவடிக்கை

யாழ்ப்பாணம்.ஜீன்10

யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கக் கூடிய 25 கைத்தொழில்கள் இனங்காணப்பட்டுள்ளன என்றும் - அவற்றை ஆரம்பிக்க விரும்புவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும் என்றும் - வர்த்தக அபிவிருத்தி நிலையத்தின் வடபிராந்திய அலுவலகத்தின் இணைப்பாளர் வை.நந்தகோபன் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இந்த அலுவலகம் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் 25 கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான வளங்கள் இங்கு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்தக் கைத்தொழில்கள் தொடர்பான அறிமுக நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பொதுநூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஸும் விசேட விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் கலந்துகொள்வர்.

வர்த்தக சேவை உதவி அமைப்பு நிறைவேற்றுப் பணிப்பாளர் மாக் ஸ்ரீவ்வைப், இலங்கை வர்த்தக அபிவிருத்தி நிலைய நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹித பெரேரா ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்கின்றனர்.

வங்கி முகாமையாளர்கள் மற்றும் வர்த்தகர் சம்மேளனம், சிறுகைத்தொழில்களுடன் தொடர்புடைய திணைக்களங்கள், சிறுகைத்தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பிராந்திய நிலையம் கைத்தொழில்கள் தொடர்பாக பல்வேறுபட்ட ஆய்வுகளை மேற்கொண்டது. அதன் மூலம் 25 கைத்தொழில்களை உடனடியாக ஆரம்பிக்கலாம் என இனங்கண்டுள்ளது.

இந்தக் கைத்தொழில்களை ஆரம்பிக்க விரும்புபவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை இந்த நிலையம் வழங்கும்.

வங்கிக்கடன் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை நிலையம் ஊடாகப் பெறமுடியும் என இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஓ-3-ரி)

### அலுவலர்களின் மெத்தனத்தால்

# சோலைவரி செலுத்த வந்த பொதுமக்கள் காத்திருப்பு

## ஆணையாளர் மன்னிப்புக் கோரினார்

யாழ்ப்பாணம்.ஜீன்10

யாழ். மாநகரசபையில் சோலைவரி செலுத்துவதற்கு நீண்டநேரமாகக் காத்திருந்த பொதுமக்களிடம் தனது அலுவலர்களின் மெத்தனத்துக்கு மன்னிப்புக் கோரினார் யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா.

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் பலரும் சோலைவரி செலுத்துவதற்காக நேற்றுக்காலை யாழ். மாநகரசபை சோலைவரிப் பிரிவுக்கு வந்தனர். அலுவலகம் ஆரம்பிக்கும் நேரம் கடந்தும் அப்பிரிவில் கடமையாற்றும் அலுவலர்கள் கடமைக்குசமுகமளிக்கவில்லை. இதனால் சோலைவரி செலுத்தவந்த பொதுமக்கள் அலுவலக வாசலில் காத்து நின்றனர்.

இதுதொடர்பாக மாநகர ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் சோலைவரிப் பிரிவுக்குச் சென்ற ஆணையாளர் அங்கு காத்திருந்த பொதுமக்களிடம் காத்திருக்க நேர்ந்ததற்கு மன்னிப்புக் கோரினார். (ஓ-7)

### நாளை

*வைகாசி 28*
*சனிக்கிழமை*
*11.06.2005*
*திதி : சதுர்த்தி*
*முற்பகல் 10.04 வரை*
*நட்சத்திரம் : பூசம்*
*பிற்பகல் 02.43 வரை*
*சுபநேரம் : 02.52 - 04.22*
*ராகுகாலம்: 08.52 - 10.22*
*(யாவும் பழைய நேரப்படி)*

# கிராமவாசிகளே நிர்மாணித்துக்கொண்ட மினி மின் உற்பத்தி நிலையம்

கொழும்பு.ஜீன்10

எட்டியாந்தோட்டைப் பகுதியிலுள்ள கிராமமொன்றில் வாழும் மக்கள் ஒன்று சேர்ந்து சிறு நீர்மின் விநியோக நிலையமொன்றை நிர்மாணித்திருக்கிறார்கள்.

தங்கள் கிராமத்துக்குத் தேவையான மின்சாரத் தேவைக்கு அரசின் தயவை நாடாமல் இம்மக்களே மின் உற்பத்தி செய்துகொள்ள இந்த நிலையம் பயன்படுகின்றது.

எட்டியாந்தோட்டை திம்பரிப் பொல கிராமத்தைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து தங்கமுவ வாவியில் அணையொன்றைக் கட்டியதன் மூலம் இந்த மின் உற்பத்தி நிலையத்தை நிறுவியுள்ளனர்.

கிராமவாசிகளும் உள்ளூர் பிரமுகர்களும் இணைந்து இந்த அணையைக் கட்டினர். ஏ.டி.பி. என்ற அமைப்பின் உதவியுடன் மின் உற்பத்தி இயந்திர சாதனங்களைப் பெற்று 5.5 கிலோ வாற் மின்சாரத்தை உற்பத்தி செய்து தமது கிராமத்தை ஒளிபெறச் செய்துள்ளனர்.

இந்த மின் நிலையத்தைப் பராமரிக்கவும் பிரச்சினைகள் எழும்போது தீர்த்துக்கொள்ளவும் இவர்கள் மின்சார நுகர்வோர் சங்கமொன்றையும் அமைத்துக் கொண்டுள்ளார்கள். (ப)

### உதயவாக்கு

பிறப்பைப்போல இறப்பும் இயற்கையே. பூதங்களின் சேர்க்கை பிறப்பாகும்; பிரிவு மரணமாகும். பிறப்பின் இயல்பே இறப்பு.

- மார்க் அரேலியர்.

# சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்

# கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் 22-06-2005 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். 23-06-2005ஆம் திகதி காலை 10.00 மணிக்குக் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் பொருட்டு நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகைமையுடையவராவர். கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல்வேண்டும்.

கேள்விகள் இணைப்பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியைச் *செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்* என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்கும் எதிர்வரும் 22-06-2005 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| இல | வேலையின் பெயர் | இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணம் (Vat 15% உட்பட) |
|---|---|---|---|---|
| 01 | மாசேரி இடைக்குறிச்சி ஊரெல்லை வீதித் திருத்தம் | M9 | 6500.00 | 575.00 |
| 02 | சரசாலை உப பணிமனைத் திருத்தம் - Stage I | M9 | 2500.00 | 575.00 |
| 03 | மட்டுவில் அம்பாள் முன்பள்ளி குழாய்க் கிணறு அமைத்தல் | M9 | 1000.00 | 575.00 |
| 04 | கெற்பெலி வீரபத்திரர் தாய் சேய் பராமரிப்பு நிலைய மலசலகூடம் அமைத்தல் | M9 | 600.00 | 575.00 |
| 05 | மருசுவில் பொதுநூலக, பொதுக்கிணறு அமைத்தல் | M9 | 1000.00 | 575.00 |
| 06 | கச்சாய் பாதாள வைரவர் வீதி 2ஆம் முறை தார் ஊற்றல் | M9 | 600.00 | 575.00 |
| 07 | மீசாலை தட்டான்குளம் வீதி 2ஆம் முறை தார் ஊற்றல் | M9 | 2000.00 | 575.00 |
| 08 | சிறீ பரமானந்தர் வீதி 2ஆம் முறை தார் ஊற்றல் | M9 | 1600.00 | 575.00 |
| 09 | கச்சாய் அல்லாரை வெள்ளாம்போக்கட்டி ஊரெல்லை வீதி 2ஆம் முறை தார் ஊற்றல் | M9 | 1500.00 | 575.00 |
| 10 | மட்டுவில் வடக்கு தோப்புக் கிணறு அமைத்தல் | M9 | 1500.00 | 575.00 |
| 11 | சரசாலை உப பணிமனைக் கட்டடத் திருத்தம் Stage II | M9 | 3400.00 | 575.00 |
| 12 | மிருசுவில் பொதுநூலக வேலி அமைத்தல் | M9 | 1500.00 | 575.00 |
| 13 | கைதடி சந்தை வளவு வேலி அமைத்தல் | M9 | 2500.00 | 575.00 |
| 14 | தண்ணீர் தாங்கி பாதுகாப்புச் சுவர் அமைத்தல் | M9 | 2000.00 | 575.00 |
| 15 | மட்டுவில் தெற்கு குருமுனி வீதித் திருத்தம் | M9 | 18000.00 | 575.00 |

மேற்குறிப்பிட்ட கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் 20-06-2005 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமாக மேலதிக விவரங்களைத் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சாவகச்சேரி பிரதேசசபை,
தலைமையலுவலகம்,
கொடிகாமம்.
08-06-2005. (சி-43289)(26-14-13)

திரு.கு.ந.பாலச்சந்திரன்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை.

### சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் உறுப்பினருக்கு

நயினை நாகபூஷணி அம்மன் வருடாந்த பெருந்திருவிழாவினை முன்னிட்டு எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை சென்.ஜோன் அம்புலன்ஸ் சேவையில் ஈடுபட விரும்பும் பாடசாலை மற்றும் தனியார் பிரிவு அங்கத்தவர்களுக்கு கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சேவையில் ஈடுபட விரும்புவோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு யாழ்.தெற்கு பிரதேச சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆணையாளர் கேட்டுள்ளார். (ஒ-202)

### விவசாயபீடத்தில் கருத்தரங்கு இன்று

'தொண்டைமானாறு நீரேரித் திட்டத்தின் ஒரு கண்ணோட்டம்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று பி.ப. 3 மணிக்கு யாழ. பல்கலைக்கழக விவசாயபீடத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட வருகைப் பேராசிரியர் வில்லி டியோசுவா உரை நிகழ்த்துவார். (3-202)


### சிங்கள வகுப்புகள்

சரளமாக பேச, எழுத, வாசிக்கக் கற்பிக்கப்படும்.

சனி, ஞாயிறு
4p.m. - 5p.m.
5p.m. - 6p.m.
(பு.நே.)

41, றக்கா லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
(UN STAFF HOUSE முன்பாக)
(36343)

By:
அ.ஸ்ரீநிரஞ்சன்



### பகவான் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
உடுப்பிட்டி



எம்மிடம்,
- கொங்கிறீற் கற்கள்
- வீடுகள் புனரமைக்கக் கூடிய கிறீஸ் கற்கள்
- தூண்கள்
- பூச்சாடிகள் மற்றும்
- சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகள் புனரமைக்க வேண்டிய பொருள்கள்

இவையனைத்தும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

☞ கட்டடப் பொருள்களையும்ஏனைய பொருள்களையும் தரமான உற்பத்தியில் வேண்டிய அளவுகளில் விருப்பத்துக்கேற்ப உடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஓடர்கள் உடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு:
திரு.ச.தங்கவேல்
பகவான் கட்டடப்பொருள் விற்பனை நிலையம்,
[ரஜினி பிடா ஸ்ரோர்ஸுக்கு அருகில்]
வதிரி வீதி, உடுப்பிட்டி.
(சி/43281)(32-14-13-26) T.P.: 0776016268


### 31 ஆம் நாள் அந்தியேஷ்டிக்கிரியை அழைப்பு



கடந்த 13-05-2005 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

திருமதி
**காசிப்பிள்ளை இலட்சுமி**


அவர்களின் அந்தியேஷ்டி, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 12-06-2005 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

புனித அந்தோனியார் கோயிலடி,
சுன்னாகம். (36342)(26-14-13) மகன் -கா.கனகரத்தினம்.

### முதலாம் ஆண்டு இதய அஞ்சலி

தோற்றம்
25 - 12 - 1926



மறைவு
22 - 05 - 2004

**அமரர் குலசேகரம் தேவராசா**

ஓராண்டும் ஆனதோ ஒளிவிளக்கு அணைந்து
தீராத வேதனையால் தினந்தினம் துடிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'தேவவாசா'
மானிப்பாய் வீதி, உடுவில். (36285)(50-14-19)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்




அன்பின் பணியாளாய் ஆர் கடல் உலகில்
பண்பு மனைவியாய், அன்னையாய், மகளாய்
இன்புற வைத்தியம் எளிய மக்கள் சேவை
நன்புறவே நயந்த நாயகியே—எமைவிட்டு
பொன்னுலகு போன செய்தி புகுந்தது நெஞ்சில்
நெருப்பாய்!

எங்கள் குலவிளக்கின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (10.06.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வினைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் நோயுற்ற வேளையில் மருத்துவ சேவை வழங்கிய யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர்கள், தாதிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இறுதிக்கிரியையில் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி, தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

– குடும்பத்தினர்

தகவல் :- வே.தயாளன்.
(மாகாண கணக்காய்வுத் திணைக்களம், யாழ்ப்பாணம்)
"துவாரகை", கைதடி மேற்கு, கைதடி.

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
1941 ● 09 ● 10



மறைவு
2005 ● 05 ● 11

சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
**அமரர் நடராஜா கணேசராஜா**

(Rtd. Laboartory Asst, Co - Operative Wholesale Establisthment, Rtd., Asst. Distillery/Warehouse Officer, State Distilleries Corporation)

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (10-06-2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றது. இவ்வைபவத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய் (36346)(26-14-13)

மனைவி, பிள்ளைகள், மருமகன்.

# வாழ்க்கையை முறையாக வாழ்ந்தால் இறைவனை உணர்ந்து இன்புறலாம்

கடவுள் யார்? எங்குள்ளார்? எப்படிப்பட்டவர்? என்ற கேள்விகள் காலம் காலமாக கேட்கப்படுகின்றன. விடாப்பிடியாக இந்தக் கேள்விகளைக் கேட்கும் சிறுவர் சிறுமியர்க்கு விடை கூறுவது கஷ்டமானதே. காட்டுமிராண்டி வாழ்க்கையிலிருந்து நாகரிக வாழ்க்கை வரை மக்கள் கடவுள் நம்பிக்கையுடையவர்களாகவே இருந்து வந்துள்ளனர். இந்த உலகினையும் உயிர்களையும் மரம், செடி கொடிகளையும் படைத்துக் காப்பாற்றுகின்ற இறை முதல்வன் இருந்தான் என்பதில் எவருக்கும் ஐயப்பாடு இருந்ததில்லை. ஆதிபகவான் முதற்றே உலகு என்பது வள்ளுவம். ஐயம் இல்லை. தெய்வம்

**ஞானக்கதிர்**

உண்டு என்று நாமக்கல்லார் கூறியதுபோல், ஒன்றென்றிரு தெய்வம் உண்டு என்று மக்கள் உறுதியாக நம்பினர். அத்துடன் நிறைவின்மை, நிலையாமை ஆகிய குறைபாடுகளை உலகியல் வாழ்வில் அனுபவிக்கின்ற மனிதன் நிறைவானதும் நிலையானதுமான ஒன்றை அனுமானித்து அதனை இறைபரம்பொருளாகப் போற்றித்துதித்துள்ளான்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கின்ற ஆனந்தமூர்த்தி என்று பரம்பொருளை தாயுமானார் குறிப்பிட்டுள்ளார்.

**"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய்**
**இன்மையுமாய்"** என்று இறைவனை மணிவாசகர் குறிப்பிட்டுள்ளார். தூணிலும் உள்ளான் துரும்பிலும் உள்ளான் என்பதற்கேற்ப

**சாணிலும் உளன் ஓர்தன்மை அணுவினை**
**சதகூறிட்ட**
**கோணிலும் உளன் ...ரு குன்றினும் உ**

என்று கம்பர் பிரகலாதன் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஏகனாய், எல்லாமாய், எங்குமாய் இறைவன் வியாபித்துள்ளான்- ஏகன் அனேகன் என்பது மணிவாசகரின் வாக்கு. எல்லாவற்றிலும் கலந்தும் எல்லாவற்றையும் கடந்தும் இறைவன் இருக்கின்றான். அருவமாயும் - உருவமாயும், அருவுருவமாயும் அவன் காட்சி தருகின்றான். எனவே, சிவன் இறைவன் என்று எழுதிக் காட்டுவது ...லாதது.

மனித அறிவிற் ...பாற்பட்ட சக்தி ஒன்று உண்டென்பதை சான்றோர்கள் அனைவரும் ஒத்துக்கொள்கின்றனர். அந்த மகத்தான சக்தியே இறைவன், அவன் அகிலமெல்லாம் வாழும் ஆருயிர்களுக்கு அன்பு செலுத்தி அருந்துணையாக இருப்பவன். மறைபொருளாகவும் மறையும் பொருளாகவும் இருந்து உலகை இயக்கிக் கொண்டிருப்பவன் இறைவன். இன்னதென்று சொல்லமுடியாத வான் பொருளாகவும் போக்கும் வரவுமில்லாப் பொடுவரிய பூரணப் பொருளாகவும் பிறப்பு, இறப்பு, தோற்றம், மறைவு, வளர்ச்சி, தேய்வு நிறைவு குறைவு என்பன போன்ற வேறுபாடுகளையும் நிலை மாற்றமும் இல்லாதவனாகவும் இறைவன் விளங்குகிறான். அன்றாடச் செயல்களிலும் கூட இறைவனே நம்மை இயக்குகின்றான்.

செம்பொருட் செழுஞ் சோதியான இறைவனை இராமலிங்க அடிகளார் பின்வருமாறு பாடுகின்றார்.

**வானாகி வளியனலாய் நீருமாகி**
**...ர்தலைய உலகாகி மாற்றுமாகித்**
**தேனாகி தேனினறுஞ்சுவையாகித்**
**தீஞ்சுவையின் பயனாகி"**

அதே இறைவனை ஏழிசையாய் இசைப்பயனாய் இருககின்றான் என்று நாவரசர் பாடுகின்றார்.

ஏழ் கடல் வையம் நீ - ஏழிசை நாதம் நீ என்று கண்ணதாசன் பாடுகின்றார்.

அன்பின்றேல் வாழ்வில்லை - அவனியில்லை - ஆங்கிலத்தில் God is Love என்னும் பழமொழி உண்டு. சிவநெறியில் வாழ்ந்த செந்தமிழ் அன்பையே இறைவனைக் கண்டனர்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவதாரும் அறிகிலார்**

என்பர் திருமூலர். அன்பு கனிந்த கனிவே சக்தி என்று பாரதியார் பாடுகின்றார்.

**அன்பே மூலம். அன்பே வையம். அன்பின் சக்தியே ஆண்டவன் தத்துவம்** என்றார் கவிஞர் கண்ணதாசன்.

இறைவன் ஒருவன் உள்ளான் அவன் வகுத்த வழியிலேயே எமது வாழ்க்கை அமைகினறது. வள்ளல் இறைவன் வகுத்ததன் வழியிலேதான் எமது வாழ்க்கை வடிந்தோடுகின்றது.

**பரமேஸ்வரி இராமலிங்கம்**

வாழ்க்கையை முறையாக வளமாக வாழ்ந்து அனுபவித்தால் இறைவனை உணர்நது இன்பம் காணலாம். அப்போது உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு உமைபங்கன் உறைவான் என்பதைப் பூசலார் வரலாறு உணர்த்துகின்றது. நம்மை நாமே நடத்தி நல்வழிகண்டு கொண்டால் உண்மைத் துணைவரும். தெய்வம் முந்தி வந்துதவும். ★

# மனித சக்தியை ஆன்மீக நெறியில் ஒழுக வல்லதாக தயார்படுத்தி வாழலாம்

## ஸ்ரீ கல்கி பெருமான் சீடர்களின் பணி இதுவே

இப் பூவுலகில் தர்மம் குன்றி அதர்மம் தலை தூக்கும் வேளையில் ஆண்டவன் பூவுலகில் அவதாரம் செய்து தர்மத்தை நிலை நிறுத்துவதாக இந்துக்கள் மத்தியில் ஆண்டாண்டு காலமாக நம்பிக்கை நிலவிவருகின்றது. அந்த வகையில் இந்தக் கலியுகத்திலும் காலத்துக்குக்காலம் ஆண்டவன் மனித அவதாரம் எடுத்துவந்து உலகத்து மக்களுக்கு நல்வழிகாட்டி அவர்களை உய்விப்பதாக இன்றும் நம்பிக்கை நிலவி வருகின்றது.

அந்தவகையில் இற்றைக்கு 56 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டில் அவதரித்த பெருமான் ஸ்ரீ கல்கியை ஒரு தெய்வ அவதாரமாகவே நம்பும் பக்தர்களில் ஒரு சாரார் அவரது போதனைகளின் வழியில் வாழத் தலைப்பட்டு வருவதை இன்று காணமுடிகிறது.

உலகத்து மக்கள் பயம், வெகுளி, எரிச்சல், பொறாமை மற்றும் தாழ்வு மனப்பான்மை போன்ற உணர்வுகளில் இருந்து விடுபட்டு, ஆன்மீக உணர்வுடன் ஆன்மீகநெறி நின்று வாழததக்க வழியைப் போதிப்பதே இத்தகைய மகான்களது சேவையாகத் திகழ்கின்றது.

அந்த நோக்கத்தை வெற்றியடையச் செய்யும் வகையில் பெருமான் ஸ்ரீ கல்கி உருவாக்கியுள்ள ஏகத்துவ பல்கலைக்கழகம் இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் வரதபாளையம் என்ற ஊரில் அமைந்துள்ளது.

ஆன்மீக ஏகத்துவத்தை அறிந்து கொள்ளும் நோக்கில் உலகின் பல பாகங்களிலிருந்தும் இன, மத, மொழி வேறுபாடின்றி பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் இங்கு கூடுகின்றனர், அவ்விதம் கூடும் பக்தர்களுக்கு பெருமான் ஸ்ரீ கல்கியின் சீடர்கள் ஏகத்துவம் என்ற வாழ்க்கை நெறி குறித்துப் போதித்து வருகின்றனர்.

எமது ஆத்மா இறைவன் என்ற பரமாத்வாவின் ஓர் அங்கமே என்ற உண்மையைப் பக்தர்களுக்கு உணர்த்தும் வகையில் தெய்வ நம்பிக்கை, குடும்ப, பாசப்பிணைப்பு, சமூக இணைவு என்பவற்றுடன் நெருக்கமாக ஒன்றிணையும் மனப் பக்குவத்தை உருவாக்கி, பக்தர்கள் ஏகத்துவத்தின் சிறப்பை உணர்ந்து கொள்ள வழிவகுத்துக் கொடுப்பதே இக்கைங்கரியத்தின் அடிப்படை நோக்கமாக அமைந்து காணப்படுகிறது.

பெருமான் ஸ்ரீ கல்கி தமது சீடர்கள் மூலம் மேற்கொள்ளும் இத் தியானப் பயிற்சிகள் மூலம், பக்தர்கள் தமது மனதில் நிறைந்துள்ள எதிர்மறைச் சக்திகளிலிருந்து விடுபட்டு ஆனந்தமய நிலையை அடைவதன் மூலம் அவர்களுக்கு மனச்சாந்தியும் மன நிறைவும் கிட்டுகிறது.

### ஆன்மீக தீட்சைப் பயிற்சிகள

பல்லாண்டு காலமாக வழக்கிலிருந்து வந்த இத் தீட்சைமுறை கால மாற்றத்தால் உலகில் அருகிவிட நேர்ந்தது. இன்று ஸ்ரீ கல்கி பகவானின் ஏகத்துவ பல்கலைக்கழகமூலம் இவ்வித ஆன்மீகத் தீட்சைகள் மீண்டும் பக்தர்கள் மத்தியில் பிரபல்யம் பெறத்தொடங்கியுள்ளன.

இத்தகைய பல்வேறு வகையான தீட்சைகள் மூலம் பக்தர்கள் ஆன்மீக தீட்சைப் பயிற்சிகளை மேற்கொண்டு மனச்சாந்தியையும் மனமகிழ்வையும் பெற்றுவருகின்றனர்.

உலக லௌகீக ஈடுபாட்டால் மன அமைதி குலைந்து கலங்கி நிற்கும் ஆன்மாவைத் தெளிவுபெறவைக்கவும், உண்மை அன்பின் அடிப்படையில் மனித தத்துவப் பண்புகளின் வழி ஒழுகி வாழவும், அச்சம், கவலை மற்றும் மன அழுத்தம் ஆகிய உணர்வுகளில் நின்று விடுபடவும் இத்தகைய ஆன்மீகப் பயிற்சிகள் உதவுகின்றன.

இன்றைய படுவேகமான உலக இயக்கத்தில் மனிதர்களும் அவர்கள் சார்ந்த சமூகமும் பலதரப்பட்ட வாழ்க்கைச் சிக்கல்களால் மனது தடுமாறித் துயருடன் வாழ்ந்துவருவது கண்கூடு. மனித சக்தியை ஆன்மீக நெறிமுறையில ஒழுகத்தக்க வகையில் தயார்படுத்தி தர்ம நெறியில் வாழ வாழிகாட்டுவதே ஏகாத்துவப் பல்கலைக்கழகத்தினூடாகப் பெருமான் ஸ்ரீ கல்கியின் சீடர்கள் மேற்கொண்டுவரும் நற்பணியாகும்.

### ஏகத்துவப் பல்கலைக்கழகம்

ஏகத்துவப் பல்கலைக்கழகம் என்ற பகவான் ஸ்ரீகல்கியினால் உருவாக்கப்பட்டு வளர்நது வரும் ஆன்மீக அமைப்பினூடாக ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொண்டு மனப்பக்குவம் எய்தும் வாய்ப்பு தற்போது இந்நாட்டில் வாழும் பக்தர்களுக்கும் கிட்டியுள்ளது.

அந்த வகையில் இந்த ஏகத்துவப் பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவான சுவர்ணயுக அமைப்பகம் தற்போது இலங்கையிலும் ஒரு கிளையை நிறுவியுள்ளது.

கடந்த ஆண்டு மார்கழி மாதத்தில் ஏகத்துவப் பல்கலைக்கழகத்தில் கூடிய பக்தர்கள் மத்தியில் எமது நாட்டின் சமாதானம் குறித்து பகவான் ஸ்ரீகல்கி திருவாய் மலர்ந்தருளிய அருள் வாக்கியங்களை இச்சமயத்தில் நாம் கருத்திற்கொள்வது சாலப் பொருத்தமானதாகும்.

2005ஆம் ஆண்டு முடிவதற்குள் இலங்கையில் சமாதானமும் அமைதியும் கிட்டும், மற்றைய நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக இந்நாட்டில் ஆன்மீக எழுச்சி வலுவடையும் என்பதே பகவான் ஸ்ரீ கல்கி கூறியருளிய அருள் வாக்கியங்களாகும்.

பொதுவாகவே மனித வாழ்க்கை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதாகும். நீண்டகாலப் போர் அனுபவங்களாலும் இயற்கை அழிவுகளாலும், மனம்களைப் புற்று துவண்டுபோய் கவலை, துன்பம், சோகம் மற்றும் விரக்தி என்ற உணர்வுகளுக்கு ஆட்பட்டுள்ள நாம், பகவான் ஸ்ரீ கல்கியின் ஆன்மீக போதனைகளை மனதில் இருத்தி அதன் வழி ஒழுகிவர முயற்சிப்போமானால் மனச்சாந்தியும், மனத்திருப்தியும் மிக்க மனிதர்களாய் வாழ வழி ஏற்படும்.

**அறிவாணன்** ★




நீர்வேலி ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரி உபஅதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் சொற்பொழிவாற்றுவதையும் இந்து கலாசார அமைச்சின் யாழ்.உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ்வித்தகர் சிவமகாலிங்கம், அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன், ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலைத் தலைவர் ந.சிவசுப்பிரமணியம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஒ-12)

# சமய சந்நிதிகளில்

குருநகர்,ஜூன்10

அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவில் ஜூலை 5ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(ஒ-51-203)

✦ ✦ ✦

வடமராட்சி,ஜூன்10

தென்புலோலி காந்தியூர் கோட்டத்தறை வேம்படி பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

(ஒ-173-203)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,ஜூன்10

ஊர்காவற்றுறை, புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(ஒ-203)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,ஜூன்10

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11நாள்கள் நடைபெறவுள்ளன.

இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 21ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(ஒ-15-203)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,ஜூன்10

வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயப் பாலஸ்தான கும்பாபிசேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.15 மணி தொடக்கம் 9.15 வரை நடைபெறவுள்ளது.

(ஒ-203)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,ஜூன்10

கொழும்பு, புறக்கோட்டை சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலய மகாகும்பாபிசேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிதொடக்கம் 8.35 மணிவரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 45 நாள்களுக்கு காலை மண்டலாபிசேகமும் மாலை சண்முகார்ச்சனையும் நடைபெறும்.

(ஒ-203)

✦ ✦ ✦

தென்மராட்சி,ஜூன்10

சாவகச்சேரி, கல்வயல் பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த திருவிழாவில் எதிர்வரும் 21 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

திருவிழாக் காலங்களில் தினமும் இரவு 7 மணிக்கு 'விநாயகர் பெருமை' என்னும் தலைப்பில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் சிவநெறிச்செல்வர் சி.கா.கமலநாதன் சொற்பொழிவாற்றுவார்.

(ஒ-203-117)

✦ ✦ ✦

தென்மராட்சி,ஜூன்10

கிளாலி புனித அந்தோனியார் ஆலயப் திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி மிருசுவில் புனித நீக்கிலார் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

திருவிழாவிற்கான ஆயத்த திரிதின வழிபாடுகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் 3 தினங்கள் நடைபெறவுள்ளன.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையைத் தொடர்ந்து திருப்பலிப் பூசையும் நற்கருணை ஆராதனையும் இடம்பெறும்.

13ஆம் திகதி காலை 7 மணிக்குத் திருநாட்பாடறபாபூசையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறுமென பங்குத்தந்தை அருட்திரு. க.அருள்நேசன் தெரிவித்துள்ளார்.

(ஒ-117-203)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,ஜூன் 10

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 24 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(ஒ-203)

# 14ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
03-03-1971

மறைவு
10-06-1992

## செல்வன்
## ஸ்ரீபாலகணேசமூர்த்தி சுஜிந்திரன்
(முகுந்தன்)

வட்டுவத்தை, அல்வாய் கிழக்கு, அல்வாய்
திதி: 10-06-2005



ஈரேழு ஆண்டுகள் சென்றாலும் உன் நினைவு நீங்காது
முகுந்தனே! எம் இல்லத்தின் குலவிளக்கே!
பாதியிலே தவிக்க விட்டுப் போனதுவும் நியாயமோ?
தாய்ப்பாசம் உனக்கு மட்டும் புரியலையோ?
பாவிச் சோதரனைத் தவியாய்த் தவிக்கவிட்டுத்
தனிவழியே செல்லத் தூண்டியது யாரப்பா?
உன் திருமுகம் ஒரு தரம் பார்த்தால் போதுமென்று துடிக்கின்றோம்!
எண்ணிக் கலங்குகிறோம் எப்படித்தான் மறப்போம்?
ஆண்டுகள் பதின்நான்கு சென்றாலும் உன் நினைவு அழியாது!

உந்தன் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்

(36312) (42-14)

வட்டுவத்தை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

சுதாகர் பாம் ஹவுஸ்
குடும்பத்தினர்.

# அடக்குமுறையின் ஒரு பிரதிபலிப்பு 'தூய ஒளி' படகுப் படுகொலைகள்

**1986ஆம்** ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதியைக் குருநகர் மக்கள் மட்டுமன்றி ஈழத் தமிழர்கள் எவரும் தமது வாழ்நாளில் மறக்க மாட்டார்கள். கஷ்டங்களை நீக்க உழைக்கும் உறுதியுடன் 'தூய ஒளி' படகில் கடலுக்குச் சென்றனர் குருநகர் கடற்றொழிலாளர்கள். அப்போது கடலில் ரோந்துவந்த இலங்கைக் கடற்படையினர் வெட்டியும் குத்தியும் அவர்களைக் கொலை செய்தனர். அந்த நாள் தான் ஜூன் 10.

வழமையானதொரு நாள் போன்றே அன்றைய நாளில் விடிகாலைப் பொழுதில் குருநகர் இறங்குதுறையில் இருந்து 'தூய ஒளிப்' படகு கரைவலை வலிக்கும் கடற்றொழிலாளர்களுடன் ஆழ்கடல் நோக்கிப் பயணம் ஆரம்பித்தது. இப்படகில் ஆர்வமுடன் தொழில்செய்ய குருநகர் மீனவர்கள் 31 பேரும் தமது உணவுப் பொதிகளுடனும் மீன்பிடி உபகரணங்களுடனும் புறப்பட்டனர்.

கி.இஸ்தாக்கி (வயது 54), பேதுறு செபதேயு சேவியர் (வயது 62), பற்றிக் டோனாஸ் (வயது 60), டோனாஸ் மவுன்ட் (வயது 38), டோனாஸ் டியுக் (வயது 18), எமிலியுஸ் மக்ஸ்மஸ் ஈஸ்வரன் (வயது 18), மனவல் மரியநாயகம் (வயது 35), சுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன் (வயது 28), அருளானந்தம் பெனடிக்ற் வேனா (வயது 50), பெனடிக்ற் பசியன் (வயது 28), பெனடிக்ற் மாசிலா (வயது 26), பெனடிக்ற் அலிஸ்ரன் (வயது 28), பங்கிராஸ் தாசிசியஸ் (வயது 30), பங்கிராஸ் யூலியஸ் (வயது 32), பங்கிராஸ் தவம் (வயது 5), தமியான் உதயகுமார் (வயது 16), முடியப்பு ராசகுமார் (வயது 33), யோன் ஜோர்ஜ்(வயது 56), மனவல் பயஸ் (வயது 60), ஆசிர்வாதம் அந்தோனிப்பிள்ளை (வயது 70), ஞானப்பிரகாசம் ஜெயபால் (வயது 16), ஞானப்பிரகாசம் ஜெயகாந்தன் (வயது 14), அருளானந்தம் டோமினிக் (வயது 60), அன்ரன் ஷெல்டன் லொயிற் (வயது 21), மனவல் பற்றிக் (வயது 60), சவியான் யேசுராசா நிக்ஸன் (வயது 12), முத்துச்சாமி (வயது 30), முத்தையா சாமிநாதன் (வயது ), அந்தோனிப்பிள்ளை பறுணாந்து (வயது 60), பெனடிக்ற் ரமேஸ் (வயது 18) ஆகியோர் இப்படகில் இருந்தனர் எனக் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தின் பதிவுகள் கூறுகின்றன.

**எம்.ஜீ.சீலன்**

அவர்கள் தொழில்செய்ய கடலுக்குச் சென்ற நாள்கள், கடற்படையினரின் பாரிய தாக்குதல் படகுகள் மீனவர்களை நோக்கித் தமது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்கும் காலகட்டம். அப்பாவி மீனவர்கள் மீது ஹெலியில் இருந்து தாக்குதல் நடத்தும் நாள்களாகவும் அவை இருந்தன. இதனை அறிந்தும் தமது நாளாந்த சீவியத்துக்கான உழைப்பைக் கடலிலிருந்து பிடிக்கும் மீனை நம்பியே வாழும் அவர்கள், தமது ஊர்த்தெய்வமான யாகப்பரின் ஆசியை வேண்டிக் கும்பிட்டு திரும்பி வருவோம் என்ற நம்பிக்கையுடன் தமது உறவுகளின் நினைவுகளைச் சுமந்து கடலை நோக்கிச் சென்றனர்.

அவர்கள் தமது கடமையைக் கண்ணாகச் செய்துகொண்டிருந்தபோது அவர்களை நோக்கிப் படகில் வந்த கடற்படையினர் 'தூய ஒளி' படகில் இருந்தவர்கள் கடற்றொழிலாளர்கள் என்று அறிந்தும் தாக்குதலை நடத்தினர். நிராயுதபாணிகளாக உயிருக்கு மன்றாடிய அப்பாவி கடற்றொழிலாளர்கள் சுடப்பட்டும் கத்தியால் வெட்டியும் வெறித்தனமாகக் கொல்லப்பட்டனர். கொலை வெறியாட்டம் நடத்தியவர்களுக்குத் துணையாக வானிலிருந்து ஹெலியும் வேட்டுக்களைத் தீர்த்தது.

கடற்படையினரும் ஹெலியும் தமது கொலை வெறியை நடத்திய கொடூரத் திருப்தியில் திரும்பிச்சென்றனர். மண்டைதீவு கரைக்குச் சற்று அப்பால் முகாமிட்டிருந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர், குற்றுயிராகக் கிடந்த கடற்றொழிலாளர்களை மீட்டு குருநகர் இறங்குதுறைக்குக் கொண்டுவந்து சேர்த்தனர்.

குருநகர் இறங்குதுறையில் திரண்ட பொது மக்கள் தமது உறவுகளுக்கு ஏற்பட்ட நிலை கண்டு மனம்கொதித்தனர்.

உயிரிழந்த 31 பேரின் சடலங்களும் குருநகர் சனசமூக நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டன.

இம்மனிதப் படுகொலை நிகழ்ந்து இன்றுடன் 19வருடங்கள் ஆகிவிட்டன. இம்மீனவர்களது குடும்பங்கள் இன்று வாழ வழியின்றித் தவிக்கின்றன. இப்படுகொலையைப் புரிந்த அரசோ, படையினரோ இதற்கு இன்றுவரை அனுதாபங்கூடத் தெரிவிக்கவில்லை. தமிழர்கள் அடக்கப்படும் இனம் என்ற எண்ணத்தில் படையினர் தம் கொடுஞ்செயலை மறந்திருக்கலாம். ஆனால், அடக்கப்படும் இனம் என்றும் அடங்கி இருந்தது இல்லை. அது என்றோ ஒருநாள் ஆக்ரோஷமாக எழுந்து தனது உரிமையை நிலைநாட்டும் என்பதே நியதி.

இம்மீனவர்கள் நினைவாகக் குருநகர் சனசமூக நிலையம் முன்றிலில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபிகூட, இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் அடித்து நொறுக்கப்பட்டு வீழ்ந்து கிடப்பதை இன்று நாம் காண முடியும். எனினும், தமிழனை அழித்தாலும் அவனது இலட்சியப் பயணம் மாறாது என்பதை நிலைநாட்ட இந்த வீழ்த்தப்பட்ட நினைவுத் தூபிக்கு அருகில் புதிய நினைவுத்தூபியை குருநகர் மக்கள் கடந்த 2004ஆம் ஆண்டு புதிதாக நிறுவியுள்ளனர். ✳

# புலிகளுக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையிலேயே ஜனாதிபதியும் வேறு சிலரும் செயற்பட முனைகின்றனர்



## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

தனிநாடு ஒன்றை அமைப்பதற்கான சகல தகைமைகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்படுத்திக்கொண்டுவிட்டனர். இவர்களுடைய தனிநாட்டுக் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே ஜனாதிபதியும், ஒரு சிலரும் பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த முனைகின்றனர். ஜனாதிபதியினதும் அவரது சகாக்களினதும் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளை ஜே.வி.பி. ஒருபோதும் அங்கீகரிக்கப் போவதில்லை.

- இப்படி அடித்துக் கூறுகின்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரான விமல் வீரவன்ஸ.

புலிகள் தமக்கென ஒரு தனி நிர்வாகம், தனியான கட்டுப்பாட்டுப் பிரதேசம், தனியான நீதித்துறை, தனியான விமானப்படை, கடற்படை, இராணுவம், பொலீஸ் என எல்லாவற்றையும் ஏற்படுத்திக் கொண்டுவிட்டார்கள். இப்போது முழுநாட்டையுமே அவர்கள் அபகரிக்கப் போகின்றனர் எனவும் அபாயச் சங்கு ஊதுகின்றார் விமல் வீரவன்ஸ.


நாடாளுமன்றிலிருந்து..

நேற்றுக்காலை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் நாடாளுமன்றம் கூடியது. ஆரம்பகட்ட உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளித்தனர். பெரும்பாலான கேள்விகளுக்குப் பதில் அளிக்க ஒரு மாதம் முதல் மூன்று மாதங்கள் வரை கால அவகாசம் கோரப்பட்டது. மற்றும் சில கேள்விகளுக்கான விடைகள் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இதனால், இடைக் கேள்விகளுக்கோ அல்லது சர்ச்சைகளுக்கோ இடமில்லாமல் போய்விட்டது.

வழமையாகவே ஏதாவது ஒன்றைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு கூச்சலிடும் ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ எம்.பி., வழமைக்கு மாறாக நேற்று மௌனம் சாதித்தார். ஆனால், திடீரென சபாநாயகரின் அனுமதியுடன் அறிகைை ஒன்றை விடப்போகின்றார் எனக் கூறினார். அப்போது அவர் கூறியதாவது:-

**விமல் வீரவன்ஸ உரை**

ஜனாதிபதியின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்காது. வடபகுதியில் ஒருசில பிரதேசங்களை மட்டும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் புலிகளுக்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரச கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களையும் தாரைவார்க்கப் போகின்றார் ஜனாதிபதி. அரச நிர்வாகத்திலும் புலிகள் தலையிடப் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அண்டை நாடான இந்தியாவும், அமெரிக்காவும் கூடப் புலிகள் விமானப்படை ஒன்றை உருவாக்கியுள்ளமைக்கு விசனம் தெரிவித்துள்ளன. புலிகளின் விமானப்படை நாட்டின் இறைமைக்கே ஆபத்தானது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரசுக்குள்ளேயே ஓர் இணக்கப்பாடு இல்லை. ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் நேரடியாகவே அதை எதிர்க்கின்றன. அரசுக்கு ஆதரவு வழங்கும் முஸ்லிம் கட்சிகளும் பொதுக்கட்டமைப்பை ஏற்கவில்லை.

டொலர்களுக்கு அடிமைப்பட்ட ஒருசிலர் ஜனாதிபதியைத் தவறான வழிக்குத் திசை திருப்பிவிட்டனர். அதற்கு நாம் அடிபணியப் போவதில்லை.

ஆழிப்பேரலை நிவாரண நடவடிக்கைகள் என்ற போர்வையில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுகிறது. ஆனால், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட கூரைத் தகடுகள் அவர்களைச் சென்றடையவில்லை. புலிகள் பங்கர்களையும், காப்பரண்களையும் அமைப்பதற்காகவே இக்கூரைத்தகடுகளை அபகரித்துச் சென்றுள்ளனர். தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் கொண்டுவரப்பட்ட பல லட்சம் டொலர்கள் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கே பயன்படுத்தப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் 315 கிராமசேவகர் பிரிவுகள் இருக்கின்றன. அவற்றுள் 270 கிராம சேவகர் பிரிவுகள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருக்கின்றன. ஏனைய 45 கிராம சேவகர் பிரிவுகள் மட்டுமே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாக இருக்கின்றன. ஆனால், ஜனாதிபதியோ பொதுக்கட்டமைப்பு என்ற பெயரில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும் புலிகளிடம் ஒப்படைக்கப் போகின்றார். நாம் ஒருபோதும் அதற்கு இடமளிக்கமாட்டோம். ஜனாதிபதியின் விவேகமற்ற செயலை ஜே.வி.பி. வன்மையாகக் கண்டிக்கிறது.

புலிகளின் விமானத்தள விஸ்தரிப்புத் தொடர்பாகப் புலிகளின் ஆத்ம நண்பரான விடர்ஹெல்கிஸனும் கவலை தெரிவித்துள்ளார்.

உத்தேச பொதுக்கட்டமைப்பில் அரசும் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாகப் புலிகளும் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளனர். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக்கூட அதில் இடமளிக்கப்படவில்லை. அப்பிரதேசத்தில் உள்ள ஏனைய தமிழ்க் கட்சிகளும்கூட உள்வாங்கப்படவில்லை. இதன் மூலம் புலிகளின் நோக்கம் மட்டுமே நிறைவேறப்போகின்றது. அரசின் பங்காளிக் கட்சிகளான எம்முடன் கூடக் கலந்தாலோசிக்காமல் ஜனாதிபதி தன்னிச்சையாகச் செயற்பட முனைகின்றார். இதனை நாம் எதைப் பணயம் வைத்தாவது தடுப்போம். இன்னும் சில தினங்களில் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவோம்.

ஏற்கனவே, சகல வளங்களையும் ஏற்படுத்திக் கொண்டுள்ள புலிகள், பொதுக்கட்டமைப்பையும் ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையில் தமிழீழத்தை அங்கீகரிக்கும்படி கோரிக்கை விடுவார்கள். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. யுத்த நிறுத்த ஒப்பந்தம் நாட்டில் அமைதியை ஏற்படுத்தாமல் நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கே வழிவகுத்துள்ளது. எனவே, நாட்டுப்பற்றுடையோர் அனைவரும் இந்தப் பொதுக்கட்டமைப்பை ஒட்டுமொத்தமாக எதிர்க்கவேண்டும். இல்லையேல் தமிழீழம் உருவாவதை எவராலும் தடுக்கமுடியாது - என்றார்.

விமல் வீரவன்ஸவின் ஆவேசமான பேச்சைப் பார்வையாளர் களரியில் இருந்த பாடசாலை மாணவர்களும் ஏனையோரும் மிகவும் அவதானமாகச் செவிமடுத்தமையையும் காணக் கூடியதாக இருந்தது.

விமல் வீரவன்ஸவின் ஆவேசப் பேச்சைத் தொடர்ந்து சிறப்புரிமைப் பிரேரணை ஒன்றைத் தூக்கிப் பிடித்துத் துள்ளி எழுந்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான சிவாஜிலிங்கம்.

ஏதோ இவரும் காட்டமாகப் பாய்ந்துவிழப் போகின்றார் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அது ஏமாற்றத்தையே அளித்தது.

"நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எம்.பிக்கள் சபையில் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது சிவாஜிலிங்கம் எம்.பி. ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவைத் தாக்கமுயன்றார் என்றும் சபாநாயகரின் மேசையில் குத்தினர் என்றும் பல பத்திரிகைகளும் அரச ஊடகங்களும் தவறாகச் செய்தி வெளியிட்டுள்ளன. அது என்னுடைய சிறப்புரிமையை மீறும் ஒரு செயலாகும். சபாநாயகர் இதுதொடர்பாகப் பரிசீலனைசெய்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்" - என்று கோரிக்கைவிடுத்து அமர்ந்துவிட்டார்.

தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் உறுதியளித்தார்.

**திருமலைப் புத்தர் சிலைச் சர்ச்சை**

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா திருகோணமலை கள நிலைவரம் தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்து வம்பை விலைக்கு வாங்கிக்கொண்டார்.

திருகோணமலையில் நிலைமைகள் ஓரளவு சீரடைந்து வருகின்றன. நகரம் இயல்பு நிலைக்குத் திரும்புகிறது என்று கூறிய பிரதி அமைச்சர், படைகளை வாபஸ் பெறுவதாக எந்தவிதமான உறுதி மொழிகளையும் வழங்கவில்லை என்று கூறிவிட்டார்.

இந்த இடத்தை இறுக்கிப்பிடித்துக்கொண்டார் மாவை சேனாதிராஜா. அதாவது, திருகோணமலையில் நிலைமைகள் வழமை நிலைக்குத் திரும்புவதாக அமைச்சரே கூறுகின்றார். அப்படியானால் மேலதிகமாகக் குவிக்கப்பட்டுள்ள படைகளை ஏன் வாபஸ்பெறமுடியாது? என்று அவர் கேட்டார். பிரதி அமைச்சர் அதற்கு நேரடியாக எந்தப் பதிலையும் கூறவில்லை.

இதனால், பெரும் சர்ச்சை ஏற்பட்டது. யாழ். மாவட்ட எம்.பி.சுரேஷ் பிரேமச்சந்திரன், "பிரதி அமைச்சர் டிலான் பெரேராவிடம் கேள்வி ஒன்றைக் கேட்டால் அதைவிட்டு அவர் வேறு பதில் ஒன்றைத் தருகின்றார். இது விடயத்தில் அவர் நேரடியாகப் பதில் தரவேண்டும். எப்போது படைகளை வாபஸ்பெறப்போகின்றீர்கள் என்று இப்போதே கூறவேண்டும்" என வலியுறுத்தினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் தரப்பில் பின்வரிசையில் இருந்த திருகோணமலை மாவட்ட ஜே.வி.பி. உறுப்பினர் ஜயந்த விஜேயசேகர குட்டையைக் குழப்பிவிட்டார்.

அதாவது, "நீங்கள் எவ்வளவு சத்தம் போட்டாலும் உங்களுக்கு எதையும் தரமுடியாது. முதலில் புலிகளை அங்கிருந்து வெளியே போகச் சொல்லுங்கள்" என்று தமிழ்க்கூட்டமைப்பினரைப் பார்த்துச் சத்தமிட்டார் ஜே.வி.பி. உறுப்பினர்.

அதுவரை அமைதியாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆத்திரத்துடன் ஆசனங்களில் இருந்து எழுந்துவந்து சபாமண்டபத்தில் நின்று கூச்சலிட ஆரம்பித்தனர். சபையில் ஒரே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. அப்போது தமிழ் உறுப்பினர்களுக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் இரு தரப்பினரும் கைகலப்பில் ஈடுபடுமளவுக்கு உச்சக்கட்டத்திற்கும் சென்றுவிட்டனர்.

மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவரான மனோ கணேசன் எம்.பியும், கூட்டமைப்பினருக்கு ஆதரவாக ஆவேசத்துடன் களம் இறங்கி ஜே.வி.பியினர் மீது கடுமையான வார்த்தைகளை அள்ளி வீசினார்.

இந்தச் சமயத்தில் சபாநாயகர் ஒரு சமயோசிதமான காரியத்தைச் செய்தார். அதாவது "இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட முத்திரை வெளியிடப்படவுள்ளது. அதை இப்போது செய்வோம். எல்லோரும் வாருங்கள்" - என்று கூறி சபை நிகழ்வுகளை 20 நிமிடங்களுக்கு ஒத்திவைத்துவிட்டார்.

என்றாலும்கூட சபையில் அமைதி ஏற்படவில்லை.

இவ்வேளையில்தான் ஜாதிக ஹெல உறுமய அதிருப்தியாளரான வண.உடுவே தம்மாலோக்க தேரர் தான் ஒரு குருவானவர் என்பதை நிரூபித்தார்.

ஆசனத்தில் இருந்து எழுந்துவந்து ஜே.வி.பியினரையும் தமிழ் உறுப்பினர்களையும் தனித்தனியாகப் பிரித்து அமைதியை ஏற்படுத்தினார். பிக்குவான அவரின் ஆலோசனைக்கு இரு தரப்பினரும் கட்டுப்பட்டு அமைதியடைந்தனர்.

ஆனாலும்கூட, 'விட்டேனா பார்' என்று தமிழ உறுப்பினர்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். எது எப்படியோ தமிழ் உறுப்பினர்களின் போராட்டம் அவர்களுக்குப் பெரும் வெற்றியை அளித்தது என்றே கூறவேண்டும். ✳

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தாவடி பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்தவரான
கிரியாலங்காரமணி
சிவஸ்ரீ சிவகடாஷக்குருக்கள்- விவஸ்வத மூர்த்திக் குருக்கள்
(மேற்படி ஆலயக்குருக்கள்)
அவர்களுக்கு 09.06.2005 வியாழக்கிழமை
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில்

### குருப்பட்டாபிஷேகம்

அம்பிகையின் திருவருளால் மங்களகரமாக நடைபெற்றது. அவரின் சேவை சைவத்திற்கும், தமிழுக்கும் மேன்மேலும் தொடர அம்பிகையின் நல்லருளை வேண்டுவதோடு, குருக் களையும் அஷ்ட ஐஸ்வரியங்களும் பெற்று அம்பிகை அருளால் பல்லாண்டு காலம் அவரின் சேவை தொடரவேண்டும் எனவும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.
ஆதீனகர்த்தா- இ.ஜெயராமலிங்கம்

(36339) (39-21-14-13)

## சேக்கிழார் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூன்10

யாழ்.சைவ பரிபாலன சபையின் ஆதரவில் சேக்கிழார் குருபூசை இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களின் பஞ்சபுராணம் ஓதல், பேச்சு என்பன இடம்பெறும்.

(8-202)

## சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்
## கிராமிய வங்கிகளின் மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 2003/ 2004இற்கான வருடாந்தக் கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இணுவில், சுன்னாகம், ஏழாலை, குப்பிளான் ஆகிய கிராமிய வங்கிகளின் வாடிக்கையாளர்கள் கீழ்க்காட்டப்பட்ட திகதிகளில் கிராமிய வங்கிகளிலுள்ள தங்களின் மீதிகளைச் சரிபார்த்துக்கொள்ளும் பொருட்டு தங்களின் கையேட்டுப் புத்தகங்கள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள் ஆகியவற்றை நேரில் சமர்ப்பித்து, மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

| கிராமிய வங்கியின் பெயர் | திகதி | கையேடு உறுதிப்படுத்தும் இடம் |
|---|---|---|
| ஏழாலை கிராமிய வங்கி | 13.06.2005 திங்கள் | ஏழாலை கிராமிய வங்கி மு.ப.9.30-பி.ப.3.30 வரை |
| குப்பிளான் கிராமிய வங்கி | 14.06.2005 செவ்வாய் | குப்பிளான் கிராமிய வங்கி மு.ப.9.30-பி.ப.3.30 வரை |
| சுன்னாகம் கிராமிய வங்கி | 15.06.2005 புதன் | சுன்னாகம் கிராமிய வங்கி மு.ப.9.30-பி.ப.3.30 வரை |
| இணுவில் கிராமிய வங்கி | 16.06.2005 வியாழன் | இணுவில் கிராமிய வங்கி மு.ப.9.30-பி.ப.3.30 வரை |

07.06.2005

சி.குமரவேல்,
தலைவர்,
சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்.

(சி-43275) (39-21-14-13)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் வைகாசித் திங்கள் 28ஆம் நாள் சனிக்கிழமை (11.06.2005) பகல் 10.45மணி முதல் 12.30 மணி வரையுள்ள சிங்க லக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திருநிறை செல்வன்
**செந்தில்குமரன்**
(குமரன்) - (Dyne)



திருநிறை செல்வி
**சுஜாதா**
(சுஜா)

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் (நல்லூர்) திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

திரு.சி.தர்மராஜா, திருமதி த.மோகனா,
திரு.த.நந்தகுமரன், செல்வி த.உமையாள்.
555/4, காங்கேசன் துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,மதவடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

திருமதி மனோகரி சக்திவேல்,
திரு.ச.சுரேஸ்குமார் (லண்டன்),
செல்வி ச.சுஜிதா.
108, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P.: 0777-724757, 0777-278385, 077- 6178189. (இரு வீட்டார் அழைப்பு)

(36320) (39-21-14-13)

## நான்காவது பிறந்த நாள் வாழ்த்து




புத்தூர் கிழக்கைச் சேர்ந்த அமரசேகரம். கைதடி மேற்கைச் சேர்ந்த பவறீத்தா தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி அபினா தனது 4ஆவது பிறந்த நாளை இன்று(10.06.2005) வெள்ளிக் கிழமை ஜேர்மனியிலுள்ள முன்சன் நகரில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா.அம்மா. தம்பி அகிதன் மற்றும் அப்பம்மா. அம்மம்மா. மாமாமார். அத்தைமார். பெரியப்பாமார். பெரியம்மாமார். அண்ணாமார். அக்காமார். தம்பிமார். மச்சான்மார். மச்சாள்மார் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

அப்பா அமரசேகரம்
Mulhauser Str.13,
Room no. 219,
81379 Munchen,
Germany.

T.P:-
0049 8972400949

(36154) (56-15-34)



# கைதடி மத்திய மருந்தகத்துக்கு மருந்துக் கலவையாளர் இல்லை

## நோயாளர்கள் பெரும் அவதி

கைதடி,ஜூன்10

கைதடி அரச மத்திய மருந்தகத்தில் மருந்துக் கலவையாளர் இல்லாததினால் சிகிச்சைக்கெனச் செல்லும் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு முன்னர் கடமையாற்றிய மருந்துக் கலவையாளர் இடமாற்றம் பெற்றுச்சென்று மூன்று மாதங்கள் ஆகிவிட்டபோதிலும் இதுவரை வேறு ஒருவரை நியமனம் செய்யாததனால் நோயாளர் பெரும் சிரமங்களுக்குள்ளாவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சிற்றூழியர் ஒருவரே மருந்துக் கலவையாளரின் கடமையை மேற்கொண்டு வருவதாகவும் இதனால் நடைமுறையில் பல சிக்கல்கள் ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது. நாளாந்தம் இம்மருந்தகத்திற்கு எழுபதிற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்கென வருவதாகவும் ஆளணிப் பற்றாக்குறையினால் வைத்தியரே சில வேளைகளில் மருந்துகளையும் வழங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது.

எனவே, இப்பிரதேச மக்களின் நலன கருதி உடனடியாக இம்மருந்தகத்திற்கு மருந்துக் கலவையாளர் ஒருவரை நியமனம் செய்ய யாழ். பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்குதியிலுள்ள பொது அமைப்புகள் பல வேண்டுகோள் விடுத்துள்ளன.

இம்மருந்தகத்திற்கு மட்டுவில், கைதடி, நாவற்குழி, கோயிலாக்கண்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்கள தினமும் சிகிச்சைக்காக வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. (8-75)

### அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற வாகனங்களுக்கு அபராதம்.

தென்மராட்சி,ஜூன்10

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய ஐந்து வாகனங்களுக்கு 67ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலீஸாரால் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய வாகனங்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 6ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்குகளை விசாரித்த நீதிவான், நான்கு பார ஊர்திகளுக்கும தலா 15ஆயிரம் ரூபா வீதமும் உழவு இயந்திரத்துக்கு 7ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதித்தார்.(8-117)




ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட

# 360 கடற்றொழிலாளருக்கு மீன்பிடி உபகரணங்கள்

வடமராட்சி,ஜூன்10

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேச மீனவர்களில் 360 பேருக்கு இதுவரை 360 பிளாஸ்ரிக் படகுகளும் அதற்கான வலைகளும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் நாட்டைத் தலைமையகமாகக் கொண்ட 'ஹியூமெடிக்கா' நிறுவனம் 360 பிளாஸ்ரிக் படகுகளையும் அவற்றிற்கான வலைகளையும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்துக்கு வழங்கியது. இவற்றை 5 கட்டங்களாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் 'ஹியூமெடிக்கா' பிரதிநிதிகள் முன்னிலையில் வழங்கியது.

இடம்பெயர்ந்து வந்து கடற்றொழில் செய்யும் வலிகாமம் வடக்குப் பிரதேச மீனவர்கள் 60 பேருக்கும் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் நாகர் கோயில் உப பணிமனையைச் சேர்ந்த மீனவர்கள் 25 பேருக்கும் ஏனைய வடமராட்சி மீனவர்களுக்கும் இந்த மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (8-173)

# சரவணை சின்னமடு பாடசாலைக்கு நல்லூர் ரோட்டறக்ட் கழகம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்10

சரவணை சின்னமடு பாடசாலை மாணவர்களுக்கு முதல் தடவையாகப் பாடசாலைக்கான இலச்சினை பொறிக்கப்பட்ட கொடியையும் மாணவர்களுக்காகக் கழுத்துப் பட்டிகளையும் கற்றல் உபகரணங்களையும் நல்லூர் ரோட்றக்ட் கழகம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்நிகழ்வு பாடசாலை அதிபர் க.சண்முகபிள்ளை தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நல்லூர் ரோட்டறக்ட் கழகத் தலைவர் து.ரமணன் மாணவர்களுக்குக் கழுத்துப் பட்டிகளை அணிவித்தார். தொடர்ந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவரும் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள், நல்லூர் ரோட்றக்ட் கழகத்தின் உறுப்பினர்களும் முறையே அணிவித்தனர்.

நல்லூர் ரோட்டறக்ட் கழகத் தலைவா உரையாற்றும்போது, மாணவர்களுக்கான மேலும ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் தமது கழ கத்தால் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்ததோடு, தொடர்ந்தும் தமது கழகம் இப்பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பல உதவிகளைச் செய்யும் எனவும் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் பெற்றோர்களும் மற்றும் பாடசாலை சமூகத்தினரும் கலந்துகொண்டனர். (ப)

## கீரிமலை கமநல சேவை நிலையத்தில் விரைவில் விவசாய வங்கி

வலி.தென்மேற்கு,ஜூன்10

கீரிமலை கமநல சேவை நிலையத்தில் விவசாய வங்கி ஒன்றை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பிரிவிலுள்ள விவசாய சம்மேளனங்கள் இந்த வங்கியின் பங்காளர்களாக விவசாயிகளைச் சேர்த்துக்கொள்ளும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. கீரிமலை கமநல சேவைக் குழுவின் தலைவர் ந.கமலநாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு கமநல சேவை நிலையத்திலும் விவசாய வங்கி ஆரம்பிக்கப்படவேண்டும் என்று கமநல சேவைகள் திணைக்களம் விடுத்திருந்த சுற்று நிருபத்தின் பிரகாரம் இந்த விவசாய வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-135)

## கிராம அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை

வலி.தென்மேற்கு,ஜூன்10

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சில்லாலை தெற்கு, முள்ளானை, மாரீசன் கூடல் ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம அலுவலர் பதவி நிரப்பப்படாமல் வெற்றிடமாக இருந்துவருகின்றது.

வேறு இடங்களிலுள்ள கிராம அலுவலர்களே இங்கு பதில் கடமையாற்றி வருகின்றனர்.

இதேவேளை -

பதவியிலிருந்து ஓய்வுபெற்ற இரு கிராம அலுவலர்கள் இவ்வெற்றிடங்களில் கடமையாற்றுவதற்காக மீள் பதவி நியமனம் கோரி விண்ணப்பித்திருந்த போதிலும் இதற்கான அனுமதிக்கடிதம் இதுவரை கிடைக்கவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது. (8-135)

## தடுப்பது யார்?




படம் : சங்கானைச் செய்தியாளர்

'விளம்பரம் ஒட்டாதீர்கள்', 'நகரத்தைத் துப்புரவாக வைத்திருக்கவும்','அதிவேகம் மரணத்தின் எல்லை' என்ற விழிப்புணர்வு வாசகங்களை வலிகாமம் மேற்குப் பிரதேச சபை சங்கானை பஸ்தரிப்பு நிலையத்தில் எழுதியிருந்தது.

அதற்கு இப்போது நேர்ந்துள்ள கதியையே படத்தில் காண்கிறீர்கள். தமது பொருள்களுக்கான விளம்பரத்தை மேற்கொள்ளுவதற்கென கிராமப் புறங்களுக்குச் செல்லும் சில நிறுவனங்கள் தமது பொருள்களுக்கான விளம்பரங்களை எங்கே ஒட்டுகின்றோம் என்பதைச் சிறிதும் கூடச் சிந்திக்காமல் இப்படியான பொறுப்பற்ற செயல்களில் ஈடுபடுவது பலரையும் விசனத்துக்குள்ளாக்கியுள்ளது. யாழ். குடாநாடு முழுவதும் இப்போது இப்படியான செயல்கள் இடம்பெறுகின்றன.

'விளம்பரம் ஒட்டவேண்டாம்' எனப் பிரதேச சபையினர் எழுதியுள்ள இடத்திலேயே இப்படி விளம்பரம் ஒட்டப்பட்டிருக்கின்றது. எனவே இவற்றைத் தடுப்பது யார்?

தமது பொருள்கள் தொடர்பாக விளம்பரங்களை மேற்கொள்வதற்கு தமது விற்பனைப் பிரதிநிதிகளை அனுப்பும் நிறுவனங்கள் எவ்வாறான இடங்களில் அவற்றை ஒட்டவேண்டும், எதில் ஒட்டக்கூடாது என்பதை அவர்களுக்குக் கூறியனுப்புவது அவசியமென சமூகப் பெரியோர் தெரிவிக்கின்றனர். (8-29)

## சமகால அரசியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்10

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் உயர்கல்வி நிறுவனங்களுக்கான 'சமகால அரசியல் கருத்தரங்கு' நிகழ்வு, கடந்தவாரம் முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இக்கருத்தரங்கு நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் கலந்து கொண்டு தற்போதைய சூழ்நிலையால் விடுதலைப் போராட்டத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்கள் தொடர்பாக விளக்கமளித்து வருகின்றனர்.

கடந்த 6ஆம் திகதி யாழ்.கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற இக்கருத்தரங்கு தொடர்ந்து பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களிலும் இடம்பெறவுள்ளதாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன் தெரிவித்தார். (8-12)

## நலனோம்புக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன

தென்மராட்சி,ஜூன்10

மருவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்ட துர்க்கா அம்மன் தேவஸ்தான சுற்றாடலில் நலனோம்புக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

பிரார்த்தனை மண்டபம், முதியோர் பராமரிப்பு நிலையம், முன்பள்ளி, திருமண மண்டபம் ஆகியவற்றுக்கு கட்டடங்கள் அமைக்கப் படவுள்ளன.

வெளிநாடுகளில் உள்ள அப்பகுதி மக்களின் நிதி உதவியுடன் இக்கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (8-117)

## தூவல் நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கப்பட்டன

வலி.தென்மேற்கு,ஜூன்10

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவின் மானிய உதவித் திட்டத்தின்கீழ் கீரிமலை கமநல சேவை நிலையப் பிரிவில் உள்ள 13 பயனாளிகளுக்குத் தூவல் நீர்ப்பாசனக் கருவிகள் அண்மையில் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, செலான் வங்கியின் கடனுதவித் திட்டத்தின்கீழ் பெரியவிளான் விவசாயிகள் சம்மேளனத்தின் நான்கு உறுப்பினர்களுக்கும் இந்தத் தூவல் நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கீரிமலை கமநல சேவை நிலையம இத்தகவலைத் தெரிவித்தது. (8-135)

# நகர அபிவிருத்தி அதிகாரிகள் குழு சாவகச்சேரியைப் பார்வையிட்டது

## போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள்கட்டுமானம் குறித்தும் ஆராய்வு

தென்மராட்சி,ஜூன்10

சாவகச்சேரி நகர அபிவிருத்தி தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் உயர் மட்டக் குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரிக்கு விஜயம் செய்து அபிவிருத்தி செய்யவேண்டிய இடங்களைப் பார்வையிட்டனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தர்மசிறி, வடக்கு கிழக்கு மாகாண நகர அபிவிருத்தி அதிகார சபைப் பணிப்பாளர் ஆரியதாச, யாழ். மாவட்ட பதில் பணிப்பாளர் இராஜநாயகம் ஆகியோர் அடங்கிய 17 பேர் கொண்ட குழுவினர் வருகை தந்திருந்தனர்.

இந்தக் குழுவினரை சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் வரவேற்றார். அன்று நண்பகல் நகர சபை அலுவலகத்தில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் செய்யப்படவேண்டிய அபிவிருத்தி செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டது.

சாவகச்சேரி நகரசபைப் பகுதியில் கடந்த 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கைளால் சேதங்கள் ஏற்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப் படவேண்டிய மீள்கட்டுமானப் பணிகள் ஆகியவை தொடர்பாக ஆராயப்பட்டது.

கலந்துரையாடலின் பின்னர் சாவகச்சேரி நகரில் சேதமடைந்து காணப்படும் பொதுச் சந்தை, பொது விளையாட்டு மைதானம், பஸ் தரிப்பு நிலையம், மாவட்ட நீதிமன்றம், ஆரம்ப நீதிமன்ற வளாகங்கள், நகரசபை சுகாதாரத் தொழிலாளர்களது வீடுகள், மாவட்ட வைத்தியசாலை, தென்மராட்சி பிரதேச செயலகம், உள்ளிட்ட பகுதிகளை - நகர அபிவிருத்தி அதிகாரசபைப் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

இதேவேளை -

சாவகச்சேரி நகரசபைப் பகுதியில் கலை அரங்கு, சிறுவர் பூங்கா ஆகியவை நிர்மாணிக்கப்படவுள்ள பகுதிகளையும் பார்வையிட்டனர்.

அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமான நில அளவைப் படங்களும் மேல் நடவடிக்கைக்காக அதிகாரிகளால் எடுத்துச்செல்லப் பட்டன.

இதேவேளை -

சாவகச்சேரி நகர சபையுடன் முல்லைத்தீவு நகரமும் நகர அபிவிருத்தி அதிகார சபையால் திட்டமிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31-117)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள NISSAN SUNNY - Super Saloon 300 - xxxx (Full Option) காரும் Hero Honda - Ambition மோட்டார் லைசக்கிளும் உடன் விற்பனைக்குண்டு. No.9, Fletcher's Lane, Chudikuli. Mobile: 0777 113880. (36384)

K.T.V., சன், ஜெயா, ESPN உட்பட 4 சனல்கள் கேபிள் மூலம் கொடுக்கத் தேவையான உபகரணங்கள் விற்பனைக்குண்டு. காலை 9 மணிக்கு முன் தொடர்பு கொள்க. திரு. T. இராஜநந்தன், ஸ்ரேசன் றோட், கோண்டாவில். (36368)

## மணமகன் தேவை

யாழ்ப்பாணம், வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரி, பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியைகள், விரிவுரையாளர்கள், அரசதுறை சார்ந்த மணமகள்களுக்கு 45 வயதுக்கு உட்பட்ட பட்டதாரி அரச பணியில் உள்ள சுய தொழில் புரிபவர்கள், வர்த்தகர்கள், சைவ போசன மணமகன்கள் தேவை. தொடர்பு: சிவாலயா, 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 021 222 7844 (36357)

## தவறிவிட்டது

கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த ஆறுமுகம் சத்தியசீலன் என்பவருடைய தேசிய அ.அ.(இல.532834406V), விசேட அ.அ. (இல.091008859) என்பன 05.06.2005 ஞாயிற்றுக்கிழமை நுணாவில் சந்திக்கும் மட்டுவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வேரற்கேணியிலுள்ள சேகர் ஸ்ரோர்ஸில் ஒப்படைத்துதவவும். (36358)

## சங்கம நிகழ்வு

வலி.வடக்கு,ஜுன்10

கோப்பாய், அச்சுவேலிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் உள்ள மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய நிகழ்வில் அரசின் தற்போதைய நிலைமை மற்றும் அரசியல் செற்பாடுகள் சமபந்தமாக கலந்துரையாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொள்வதுடன் முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-86)

## நல்லூரில் தொடர்மாடி வீடுகள்

அதிசயம்; ஆனால் உண்மை வீடு ஒன்றின் விலை ரூபா 28 லட்சம் மட்டுமே!

தயா ஏஜென்சி
இல.3, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி தொடர்பு இரவு 7.00 மணிக்குப் பின் மட்டுமே
T.P: 0777 - 283795
(C/43272) (54)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By: விக்னேஸ்வரன் ஆச்சா Dip. in English 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம. (36370)(21-11-15)

## KU BAND டிஸ் அன்ரனா

சன், ஜெயா, பொதிகை, ESPN, ஸ்போட்ஸ் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட சனல்களைக் கண்டுகளியுங்கள். வாடகையில் 75 % தள்ளுபடி சலுகை 15.06.2005 வரை மட்டும்.

T. இராஜநந்தன்
ஸ்ரேசன் றோட் (Raj green farm)
கோண்டாவில்
(36369) (21-11-15-32)

## கிணறு மூடப்பட்டதால் மக்கள் சிரமம்

தென்மராட்சி,ஜுன்10

கொடிகாமம், கண்டி வீதியில் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டுவந்த பொதுக் கிணறு திடீரென மூடி போட்டு அடைக்கப்பட்டதால் பலர் குடிதண்ணீருக்காக நீண்ட தூரம் செலலவேண்டியுள்ளதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொடிகாமம் நகர்ப் பகுதி வர்த்தகர்கள், குடியிருப்பாளர்கள் தமது குடிதண்ணீர்த் தேவைக்காக இக் கிணற்றினை நீண்ட காலமாகப் பயன்படுத்திவந்ததாகவும், இக்கிணறு அண்மையில் புனரமைப்புச செய்யப்பட்டதுடன் திடீரென மூடிபோட்டு அடைக்கப்பட்டதால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர். (8-117)

கணபதி துணை

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

### கொக்குவில் மேற்கு சொர்ணவடலி அருள்மிகு ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் தேவஸ்தான

பார்த்திப வருட

### திவ்ய மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| கொடியேற்றம் | 11.06.2005 சனிக்கிழமை காலை 8.45மணி |
| இரதோற்சவம் | 21.06.2005 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி |
| தீர்த்தோற்சவம் | 22.06.2005 புதன்கிழமை காலை 9.30மணி |
| பூங்காவனம் | 23.06.2005 வியாழக்கிழமை மாலை 5.00 மணி |

மகோற்சவ குரு: சிவப்பிரம்மஸ்ரீ
சொ.இரத்தினசபாபதிக் குருக்கள் (ஆலய பிரதம குரு)
ஆலயகுரு:
சிவப்பிரம்மஸ்ரீ சொ.இ.விக்கினேஸ்வரக்குருக்கள்

சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு.

நிர்வாக சபையினரும்
உபயகாரரும்.

(36389)(21-11-15)

## அரச அலுவலர்களுக்கான தொலைக்கல்விப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜுன்10

யாழ்.மாவட்டத்தில் பதவி நிலை அரச அலுவலர்களுக்கான 3ஆம் கட்ட தொலைக்கல்விப பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்குச் சாவகச்சேரி, பருத்தித்துறை, தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் ஆகிய நிலையங்களில் நடத்தப்பட்ட தொலைக் கல்விப் பயிற்சியில் முதல இரண்டு கட்டப் பயிற்சியில் கலந்துகொண்டு பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இரண்டாம் கட்டப் பரீட்சையில சித்தியடைந்த உத்தியோகத்தர்கள் 3ஆவது கட்டப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகத் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30ஆம திகதிககு முன்னர் அனுப்பி வைக்குமாறும், இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற விரும்புவோர் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபா ஆ. சிவசுவாமியிடம் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (8-13)

## கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம் (வ-து) முல்லைத்தீவு

# பதவி வெற்றிடம்

பதவி: பொது முகாமையாளர் 101/08

சம்பள அளவுத் திட்டம்:

5250 - 120 x 10 - 130 x 10 - 7750
இத்துடன் ரூபா - 1250/- அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும்.

**தகைமை:**

அ) கூட்டுறவுப் பணியாளருக்கான 9ஆவது சம்பளத்திட்டத்தில் 3வருட முகாமைத்துவ மேற்பார்வைத்தர அனுபவம் அல்லது 10ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமைத்துவம்/மேற்பார்வைத்தரத்தில் ஆறுவருட (06) அனுபவம்.

அல்லது

ஆ) ஒரு பல்கலைக்கழகப் பட்டம் அல்லது சமமான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/வர்த்தக நிறுவனம் ஒன்றில் நான்கு வருடத்திற்குக் குறையாத முகாமைத்துவத்தர அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் உயர்தர சான்றிதழ்/க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி அத்துடன் ஓர் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் / வர்த்தக நிறுவனத்தில் ஆறு ஆண்டுகளுக்குக் குறையாத முகாமைத்துவ தர பதவியில் அனுபவம்.

**நிபந்தனை**

01) வயது 23-45 வரை கூட்டுறவுப் பணியாளருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது. சேவையிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்கள் தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

02) ரொக்கப்பிணையாக ரூபா - 20,000/- செலுத்துவதுடன், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு ஏற்பாடுகளுக்கு அமைய உறுதிப்பிணையும் செலுத்துதல் வேண்டும்.

03) முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 18.06.2005 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக தலைவர், கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவே அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தலைவர்
கரைதுறைப்பற்று
ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு.

(C/43294)(21-11-15)

## பாடசாலையை இயங்கவைக்க நடவடிக்கை

ஐந்து வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலையை மீண்டும் இயங்கவைக்க தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

2000ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த இந்தப் பாடசாலையின கட்டடங்கள் புனமைக்கப்பட்டதுடன் பாடசாலை வளவில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி வேலைகளும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. இதனையடுத்து இப்பாடசாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்காக இப்பாடசாலையை அண்டிய பகுதியிலுள்ள பெற்றோருடன் கடந்த 7ஆம் திகதி வலயக் கல்விப் பணிப்பாளர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையில் இக் கலந்துரையாடல இடம்பெற்றது.

இப்பாடசாலை தற்போது மிருசுவில் றோ.க.த.க.பாடசாலையில் தற்காலிகமாக இயங்கிவருவது குறிபபிடத்தக்கது. (8-117)

# பதவி வெற்றிடம்

யாழ். நகரில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ண்ப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விற்பனையாளர் (Sales boy)
02. சிட்டை லிகிதர் (Bill clerk)

தகைமை:- க.பொ.த. (சா/த) வர்த்தகம், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி (ஆங்கில அறிவும் விரும்பத்தக்கது)

வயது:- 25- 40 வரை

உங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் (15.06.2005) புதன்கிழமைக்கு முன்பாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

விளம்பர இல: 2612
மே/பா உதயன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

36353) (39-21-11-15)

# குடும்ப வைத்திய இயல் நிறுவனம் (Institute of Family Medicine)

மேற்படி நிறுவனத்தில் குடும்ப வைத்திய இயல் பட்டப்பின் படிப்பு பயிற்சிக்கான மருத்துவர் ஒருவர் தேவை.

**எதிர்பார்ப்புகள்**

1. குடும்ப வைத்தியத்தை தனது நீண்டகால நோக்கமாகக் கொண்டிருத்தல்.
2. பட்டப்பின் படிப்பில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வதில் விருப்பம் (Diploma in family Medicine (S.L) Doctorate in family Medicine (MD-SL) MRCGP (Int) U.K)
3. மருத்துவ ஆராய்ச்சி (குடும்ப வைத்தியம்)யில் ஈடுபாடு கொள்வதற்கான ஆர்வம்.
4. மருத்துவம் சார்ந்த பட்டமுன் படிப்பு மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான ஆர்வம்.
5. குறிப்பிட்ட தொகை நோயாளரை குடும்ப வைத்திய நிறுவனத்தின் ஆரம்ப சுகாதார நிலையங்களில் (யாழ்.பிரதான வீதி, சாவகச்சேரி) பார்வையிடல்.
6. உள்நாட்டு, வெளிநாட்டு மருத்துவ நிபுணர்களுடன் துறைசார்ந்த தொடர்புகளை ஏற்படுத்தல்.
7. கணனி கையாளும் ஆற்றல்

**அடிப்படைத் தகைமை:**

MBBS + உள்ளக பயிற்சி முடித்தவர்

மேற்படி குடும்ப வைத்திய நிறுவனத்தின் பயிற்சியில் 2 அல்லது 3 வருட கால பயிற்சி நெறியில் ஈடுபடும் மருத்துவர் அக்கால கட்டத்தில் DFM, MD, MRCGP (U.K) பரீட்சைகளில் தோற்றி சித்திபெற உள்நாட்டு, வெளிநாட்டு குடும்ப வைத்தியத்துறையில் உள்ள மருத்துவர்களால் பயிற்சி அளிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பட்டப்பின் படிப்பு தகைமையை இறுதியில் பெறும் மருத்துவருக்கு வெளிநாட்டில் உள்ள குடும்ப வைத்திய நிறுவனத்தல் ஒரு வருடகால மேலதிக பயிற்சி கிடைப்பதற்கான வசதி செய்து கொடுக்கப்படும்.

வேலை நேரம் 40 மணி/கிழமை 05 wks சம்பளத்துடன் கூடிய லீவு.

**பயிற்சிக்கால ஊதியம்:**

பல்கலைக்கழக மானியம் - பேராசிரியர் அல்லது அரச வைத்திய சேவைக்கு சமமான ஊதியம்; மேலதிக நேரக் கொடுப்பனவு தேவைப் படும் சந்தர்ப்பத்தில் வழங்கப்படும்.

யாழ். நகர மத்தியில் அமைந்துள்ள மருத்துவரின் இருப்பிட விடுதியில் தனிமையானவருக்கான இருப்பிட அறை வேலை செய்யும் காலத்திற்கு வழங்கப்படும்.

இந்த மருத்துவத்துறை எமது தாய்நாட்டில் புதியதாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அரச சேவையில் இருந்துகொண்டு பகுதிநேரமாக அல்லது முழுதாக அரச சேவையை விட்டு விலகி சேர விரும்புபவர்கள் விண்ணப்பிக்கவும்.

**வேலை ஆரம்ப திகதி: 01-09-2005**

மேலதிக விவரங்கள்
டாக்டர் **சிவானந்தன், குடும்ப வைத்தியர்** U.K
டாக்டர் **பூலோகநாதன், குடும்ப வைத்தியர்** U.K
டாக்டர் **குகதாசன், குடும்ப வைத்தியர்** U.K
டாக்டர் **ராஜலோகேஸ்வரன், பல் வைத்தியர்** U.K

இல.125, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
E.mail: admin @ miot org.uk
website: www.miot.org.uk
(C/43293)

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம்



வேலணை, துறையூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம் அவர்கள் நேற்று முன்தினம் (08.06.2005) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், மயூரன் (மாணவன் - சென்.பற்றிக்ஸ்), சிந்துஜா, சண்ஜா, வேணுஜா (மாணவிகள் - வேலணை மத்திய கல்லூரி), தணீசன், கயூரன் (மாணவர்- வேலணை ஐயனார் வித்தியாலயம்), பாணுஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.06.2005) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக துறையூர் தாழையம்பதி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை,
துறையூர்.

தகவல்
குடும்பத்தினர்
அ.சோமசுந்தரம்
(கணவர்)

(36372)(21-11-15)

# தேசியத்தலைவரின் எண்ணக்கருத்துப்படி வெற்றிகரமாகச் செயற்படும் 'கிராம தரிசிப்பு'

## முல்லைத்தீவு அரசியல்துறையினர் பெருமிதம்

முல்லைத்தீவு,ஜூன்10

பொதுமக்களின் தேவைகளை இனம் கண்டு அவற்றை நிறைவேற்றும் பணியில் விடுதலைப் புலிப்போராளிகள் ஈடுபடும் 'கிராம தரிசிப்பு' நிகழ்வுகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்தனர்.

'போராளிகள் பொதுமக்களுக்கான சேவையிலும் ஈடுபடவேண்டும்' என்ற தேசியத்தலைவரின் எண்ணக்கருத்தை நிறைவு செய்யும் முகமாகவே கிராம தரிசிப்புக்கள் இடம்பெறுகின்றன என்றும் அவர்கள் கூறினர்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: -

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் 'கிராம தரிசிப்பு' நிகழ்வு இடம்பெறுகிறது. அந்த தினத்தில் தெரிவுசெய்யப்பட்ட கிராமத்திற்கு அப்பிரதேசத்தின் அனைத்துத் துறைப்பொறுப்பாளர்களும், போராளிகளும் செல்வார்கள். அவர்கள் அப்பகுதிப் பொதுமக்களுடன் இணைந்து பல்வேறு வேலைத் திட்டங்களில் ஈடுபடுவார்கள்.

இதனடிப்படையில், காலைமுதல் நண்பகல்வரை மக்களின் அடிப்படைத் தேவைகளைச் சிரமதானம் மூலம் மக்களுடன் இணைநது போராளிகள் நிறைவேற்றுவார்கள். பின்னர் நண்பகல் முதல் ஒவ்வொரு வீடாகச் செல்லும் போராளிகள் மக்களின் பிரச்சினைகளைத் தனித்தனியே கேட்டு அவற்றிற்கான தீர்வைக் காண முயற்சிப்பார்கள். பிற்பகல் 4 மணியளவில் பொது இடம் ஒன்றில் பொதுமக்களும் போராளிகளும் ஒன்று கூடுவார்கள். அங்கு அரசியல் ரீதியான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்படும்.

இந்தவகையில், பொதுக்கிணறு, மைதானம், பொது இடங்கள் போன்றவற்றைத் தூய்மையாக்கல், போக்குவரத்துப் பாதைகளை அமைத்தல், முன்பள்ளி, மாலை நேரக் கல்வி நிலையம போன்றவற்றை உருவாக்குதல் ஆகியவை உட்பட பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கல்விமேம்பாட்டுப் பேரவை, பிரக் நிறுவனம், உட்பட பல தன்னார்வ அமைப்புக்கள் 'கிராம தரிசிப்பு' நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிவருகின்றன.

போராளிகளுடன் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய் உமைநேசன் ஆகியோரும் இந்த நிகழ்வுகளில் பங்குபற்றி வருகின்றனர்.

- இவ்வாறு முல்லை. மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்தனர்.

(ஒ-410-353)

## மரநிழலில் கல்வி கற்கும் புதுக்காட்டுச் சிறார்கள்

வெள்ளாங்குளம்,ஜூன்10


வன்னிப் பகுதியல் உள்ள வெள்ளாங்குளம், தேவன்பிட்டி, புதுக்காட்டுக் கிராமத்தில் முன்பள்ளிச் சிறார்கள் மரநிழலில் அமர்ந்தே கற்கவேண்டிய அவலநிலையில் உள்ளனர். 'வாழ்வுதயம்' என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் சுமார் 35 சிறார்கள் இந்த முன்பள்ளியில் கல்வி கற்று வருகிறார்கள். உள்ளூரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் குறைந்த ஊதியத்துடன் கற்பித்து வருகிறார்.

இந்த முன்பள்ளிக்கு கட்டடமோ, கல்வியூட்டல் உபகரணங்களோ கிடையாது. இங்கு கற்கும் சிறார்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். ஆகவே, அவர்களது பெற்றோர்களால் இந்த முன்பள்ளியை அபிவிருத்தி செய்யமுடியாதுள்ளது.

• சிறார்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இந்த முன்பள்ளியை அபிவிருத்தி செய்ய அதிகாரிகளும், அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்வரவேண்டும் என்று இப்பகுதி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

(ஒ-415)



மடு வீதியில் உள்ள சிப்பியாறு பாலத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. (ஒ-291)

*(படம்: பிரசாத் போட்டோ, ஜெயபுரம்)*

## சின்னச் சாளம்பன் கிராமத்தில் பகல் பராமரிப்பு நிலையம் அமைப்பு

முல்லைத்தீவு,ஜூன்10

ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள சின்னச் சாளம பன் கிராம மாணவர்கள் மற்றும் சிறார்களின் நலன்கருதி பகல் பராமரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

இப்பகுதியில் வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் கல்லுடைக்கும் தொழிலில் ஈடுபடுகிறார்கள். இதனால், வேலைக்குச் செல்லும் பெற்றோர் தமது பிள்ளைகளைக் கல்விகற்கப் பாடசாலைக்கு அனுப்பாது வீட்டில் மறித்து தம்முடன் தொழிலுக்குக் கூட்டிச்செல்லும் நிலை காணப்படுகிறது.

அதுமட்டுமல்லாது இப்பகுதியிலுள்ள பெரும்பான்மையான சிறுவர்கள் போசாக்குப் பற்றாக்குறை உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இவற்றை நிவர்த்திசெய்யுமுகமாகவே இந்தப் பகல் பராமரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது என்றும் -

அந்தப் பகல் பராமரிப்பு நிலையத்தில் சேர்க்கப்படும் சிறுவர்களுக்குப் போசாக்கு உணவு வழங்கப்படுவதுடன், கற்றல் செயற்பாடுகளும் இடம்பெறும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இக்கிராமத்தில் தமிழீழக் கல்விக்கழகத்தின் நிதியுதவியுடன் தரம் ஒன்று முதல் தரம் 5 வரையான மாணவர்கள் கல்வி கறபதற்கு வசதியாகப் பாடசாலை ஒன்று நிறுவப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகளைக் கல்விக்கழகம் மேற்கொண்டுவருகிறது.

(ஒ-410-353)

## இலவச போசாக்கு மா வழங்க முல்லைத்தீவில் பணம் வசூலிப்பாம்

புதுக்குடியிருப்பு,ஜூன்10

கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்மாருககும் குழந்தைகளுக்கும் இலவசமாக வழங்கப்படும் திரிபோஷா, சோழன் சோயமா ஆகியவற்றுக்கு முல்லைத்தீவில் சில இடங்களில் சுமைகூலி என்றபெயரில் பணம் அறவிடப்படுவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரசினால் திரிபோஷாமாவும், ஐ.நா உலக உணவுத் திட்டத்தின் கீழ் சோழன் சோயா மாவும் வழங்கப்படுகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள தாய் சேய் பராமரிப்பு நிலையங்கள் ஊடாகக் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்கு இவை வழங்கப்படுகின்றன. சில நிலையங்களில் மேற்படி போஷாக்கு மாப்பொதிகளை ஏற்றியிறக்கும் கூலி என்ற பெயரில் தலா 5ரூபா வசூலிக்கபபடுவதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

(ஒ-353)

# முஸ்லிம் குடிமகனின் உரிமைகோரி ஆரம்பமான இரண்டாம் ஈழப்போர்

தமிழீழ விடுதலைப் புலிகளை இந்திய வல்லாதிக்கவாதிகள் அழித்துவிட்டார்கள். இனி புலிகளால் எதனையும் செய்யமுடியாது. அவர்கள் இனி வெறும் நொண்டிக் குதிரைகளே எனப் பலரும் எண்ணிய வேளையில், இல்லை புலிகள பலத்துடன்தான் இருக்கின்றார்கள் என்பதை முழு உலகிற்கும் பறைசாற்றியது இரண்டாம் கட்ட தமிழீழப் போர்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி இராண்டாம் கட்டத் தமிழீழப் போர் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் குடிமகன் ஒருவருக்கு நீதி வழங்க இலங்கைப் பொலீஸார் மறுத்த சம்பவத்தால் தொடங்கியது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் குடிமகன் ஒருவரை பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் தாக்கினார். அதனை மட்டக்களப்பு பொலீஸ நிலையத்தில் முறையிடச் சென்ற முஸ்லிம் குடிமகன் அங்குள்ள பொலீஸாரால் முறைப்பாட்டைப் பதிவுசெய்யாது விரட்டப்பட்டார்.

இதனைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கவனத்திற்குப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் குடிமகன் கொண்டுவந்தார். இதனைக் கேட்பதற்காகச் சென்ற விடுதலைப் புலிகள் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விரட்டியடிக்க இலங்கைப் பொலீஸார் முற்பட்டனர்.

இலங்கையில் தாம் எதனைச் செய்தாலும் யாரும் எதனையும் கேட்க முடியாது என்ற மமதையில் இருந்த முப்படைகளும் கிழக்கு மாகாணத்தில் பெரும் அதிர்ச்சியை அன்று சந்தித்தன.

1990ஆம் ஆண்டு ஜூன் 10ஆம் திகதி மாலையில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் உள்ள அனைத்துப் பொலீஸ் நிலையங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் சுற்றிவளைக்கப்பட்டன. 11ஆம் திகதி திங்கட்கிழமை பற்பகல் 2 மணிக்கு முன்னர் அனைத்துப் பொலீஸாரையும் ஆயுதங்களுடன் சரணடையும்படி புலிகள் ஒலிபெருக்கிமூலம் அறிவித்தனர்.

இதன் பிரகாரம் கல்முனை களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையங்கள் தவிர்ந்த ஏனைய பொலீஸ் நிலையங்களில் இருந்த பொலீஸார் ஆயுதங்களைப் புலிகளிடம் ஒப்படைத்துவிட்டனர். இதைத் தொடர்ந்து புலிகள் இவர்களை அருகில் உள்ள இராணுவ முகாம்கள் மற்றும் விமானப்படைத்தளங்களுக்குத் தப்பிச்செல்ல அனுமதித்தார்கள்.

இதனையடுத்து மட்டக்களப்பு, வாழைச்சேனை, ஏறாவூர், கல்குடா, வெல்லாவெளி, பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய எட்டுப் பொலீஸ் நிலையங்களும் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி, அம்பாறை மாவட்டத்தில், கல்முனை பொலீஸார் சரணடையாது புலிகள்மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இத்துடன், புலிகளின தடைகளை உடைத்துச் செல்ல முயன்றனர். இந்த நிலையில், புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர்.

அப்போது இராணுவத்தினருடன் ஏற்பட்ட சண்டையில் 10 இராணுவத்தினர் கல்முனையில் இறந்தனர்.

முஸ்லிம் குடிமகன் ஒருவருக்காகவே இரண்டாம் கட்டத் தமிழீழப் போரைப் புலிகள் ஆரம்பித்தனர். இந்தநிலையில் இன்று உண்மைக்கு மாறாக முஸ்லிம்கள் தமிழ் மக்களினால் பாதிக்கப்படுகின்றனர் என்று முஸ்லிம் தலைமைகள் கூறித் தமது பதவிகளைக் காப்பாற்ற முனைந்துநிற்பது வேடிக்கை மட்டுமல்ல வேதனையுமாகும்.

இதேபோன்று கல்முனைப் பொலீஸ் நிலையத்தில் இடம்பெற்ற சண்டையில் 4 பொலீஸாரும் 3 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையத்தில் இடம்பெற்ற சண்டையில் 2 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்ற இராணுவத்தளபதி ஹமில்டன் வனசிங்காவும் பொலீஸ்மா அதிபர் ஏனஸ்ட பெரேராவும் சமாதான முயற்சியில் ஈடுபட்ட போதிலும் அது வெற்றிபெறவில்லை.

நான்காம் நாள் வடக்கிலும் யுத்தம் ஆரம்பமாகியது. இதே நேரம் இந்தியாவில் இருந்து வெளிவரும் பத்திரிகையான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை தனது கட்டுரையில் இந்திய இராணுவம் செய்யமுடியாததை இலங்கைப் படைகளும் செய்யமுடியாது எனக் குறிப்பிட்டிருந்தமை இன்றும் கருத்தில்கொள்ளத் தக்கதாகும்.

ஜூன் 17ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்த போதிலும் இதனை நடைமுறைப்படுத்துவதில் அரசு அக்கறைப்படவில்லை.

இதற்குப் பதிலாக இராணுவத்தினரை 19 ஆம் திகதி முழு அதிகாரங்களையும் கொடுதது சண்டைக்குச் செல்லும்படி அன்றைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண கட்டளையிட்டார்.

**நேசன்**

இரண்டாம் கட்ட தமிழீழப் போர் பல உண்மைகளை வெளிப்படுத்திநின்றது.

இடைக்காலத் தீர்வு என்பது நிரந்தர அமைதியைத்தரமாட்டாது என்பதையும் -

பேரினவாத ஆதிக்கம் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தொடரமுடியாது என்பதையும் -

தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது என்பதையும் -

தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரித்து வடக்கையும் கிழக்கையும் தனித் தனியாகப் பிரிக்க முடியாது என்பதையும் -

இலங்கையின் பெரும்பான்மை இனத் தலைவர்கள் எவராக இருந்தாலும் சரி தமிழ் பேசும் மக்களை அடக்கியாளுவதிலும் அழிக்கும் நடவடிக்கையிலும் மன வேறுபாடு அற்றவர்கள் என்பதையும் -

வெளியுலகிற்கு இரண்டாம் கட்டத் தமிழீழப் பேலர் வெளிப்படுத்தி நின்றது. ★

உ
சிவமயம்

# திறப்பு விழா அழைப்பு

குதூகல ஆரம்பம்

*அன்புடையீர்!*

நிகழும் பார்த்திப வருஷம் வைகாசி மாதம் 27ஆம் நாள் (10-06-2005) வெள்ளிக்கிழமை (பு.நே.) இன்று காலை 6.50மணி தொடக்கம் 8.20 மணி வரை வரும் சுபவேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**® SKY LINE RESTURANT**
(குளிரூட்டப்பட்டது)

புதிய கட்டடத் தொகுதி இல. 198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஆரம்பித்து வைக்கப்படவிருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
தொ. இல: 071 - 4168479, 021 - 222 7539.

உரிமையாளர்
**S.T. றஜீவ்.**

(36383)(26-14-45)



யாழ்ப்பாண மக்களுக்கு ஓர் இனிய செய்தி!



## விமானப் பயணக் கட்டணம் விலைக் குறைப்பு

- கொழும்பு – சென்னை–கொழும்பு: ரூ. 9000 + Tax
- கொழும்பு – டோகா: ரூ. 9000 + Tax
- கொழும்பு – லண்டன்: ரூ. 35000 + Tax
- கொழும்பு – லண்டன் – கொழும்பு: ரூ. 70000 + Tax
- கொழும்பு – குவைத்: ரூ. 18200 + Tax

- கொழும்பு – பிரான்ஸ் / ரோம் / சுவிஸ் / ஜேர்மனி: ரூ. 40,000/= +Tax
- கொழும்பு – கனடா: ரூ. 61500 + Tax

**எற்கின் ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்ஸ் சேவிஸஸ் பிறைவேற் லிமிட்டட்**

56/15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உடன் வரும் அழைப்புகளுக்கு:
0777 - 270452
0777 - 915824
021 222 3771

உங்கள் நம்பிக்கையான பிரயாண முகவர்

(C43302)(84-19-15)



## நான்காம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 25 - 10 - 1985



இறப்பு 10 - 06 - 2001

**அமரர் ஸ்ரீநிதி கபில்**

திதி : 10.06.2005

**ஆண்டுகள் நான்காகி விட்டும்**
**ஆறவில்லை எம் துயரம்**
**நீண்ட தூரம் நீ சென்றுவிட்டாலும்**
**எங்கள் மனதில் உன் நினைவுகள்**
**என்றும் மறையாது!**

என்றும் உன் நினைவுகளுடன்
**பெரியப்பா குடும்பம்.**

ஊரெழு கிழக்கு.
(36375)(32-14-45-26)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 07 - 12 - 1923



மறைவு 11 - 05 - 2005

அமரர்
**சபாரத்தினம் கந்தசாமி**

ஆதவனின் வரவையெண்ணி வானம் விழித்திருந்ததோ?
குயிலின் இசைகேட்க மாஞ்சோலை ஏங்கியிருந்ததோ?
தென்றலின் தாலாட்டுக்காக மலர்கள் மணம் பரப்பியதோ?
கந்தசாமிப் பெரியோனின் வரவைக் காண -
சொர்க்கம் காத்திருந்ததோ?

–குடும்பத்தினர்

புகையிரத நிலைய வீதி.
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
(36376)(60)


### மெய்வன்மைப் போட்டி

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெறும்.

நிலைய மைதானத்தில் நிலையத் தலைவா வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இப்போடடிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிப் பிரதேசச் செயலக சிறுவர் நன்னடத்தை அலுவலர் க.சிவகரனும், கௌரவவிருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம், சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் சஅம்பிகைபாகன் ஆகியோரும் கலந்துகொள்வர்.(3-117)

### கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி மகா சஙகப் பொதுச் சபைக் கூட்டம் இன்று 2.30 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும்.

மகா சங்கத் தலைவர் வே.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு முதன்மை விருந்தினர்களாக யாழ் அரச அதிபர் க.கணேஸ் கலந்துகொள்வர்.

(ஒ-117)

## மண்டைதீவுக் கடலில் படுகொலைசெய்யப்பட்ட மீனவர்களின் நினைவுதினம்

குருநகர்,ஜூன்10

மண்டைதீவுக் கடற்பரப்பில் வைத்துப் படுகொலைசெய்யப்பட்ட குருநகர் மீனவர்களின் 19ஆவது வருட நினைவு தினம் இன்றாகும்.

இதனையொட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி 'தூய ஒளி' படகில் வைத்து 31 மீனவர்களும் வெட்டிக்கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(8-51)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**
முகாமைத்துவ கற்கைகள்
வணிகபீடம்
**முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள்**
**கல்வியாண்டு - 2004/2005**

முகாமைத்துவக் கற்கைள் வணிக பீடத்தின் பின்வரும் (BAd./B.Com.) முதலாம் அரையாண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 20.06.2005ஆம் திகதி வரை பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாம் வருடம்
இரண்டாம் வருடம் (பகுதி I)
மூன்றாம் வருடம் (பகுதி II)
நான்காம் வருடம் (பகுதி III)

மீள்பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு (பழைய/புதிய பாடத்திட்டம்) ரூபா 50/- வீதம் பல்கலைக்கழகக் காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை 14.06.2005 செவ்வாய்க்கிழமை முதல் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைப் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(சி-43295) **- பதிவாளர்.**



## கொழும்பு இறையியல் கல்லூரி யாழ். மையம்

பாடம்: அருட்பணி அறிமுகம்
விரிவுரையாளர்: ஹரிஹரகரன் (B.Th.)
காலம்: 13 - 17 ஆனி 2005
நேரம்: மு.ப.9.00 மணி - பி.ப. 2.00மணி வரை
இடம்: **CTS யாழ். மையம்,**
விதானையார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(36392)(26-14-45) **- இணைப்பாளர்.**



## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் (12-06-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும்.

நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவிருப்பதால் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி வேண்டுகின்றோம்.

- தலைவர்.
இணைச் செயலாளர். (36255)(26-14-45)



## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை சங்கீத ஆசிரியர்*
திருமதி ம.திருஞானசம்பந்தன்
*அவர்களின் அருமைத் தாயார்*
**திருமதி சிவசுப்பிரமணியம் பூமணி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள், பா.அ.சங்கத்தினர்,
யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்.

(36371)(26-14-45)



## புத்தூர் சிவன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

யாழ் வன்னி காளைகள் பங்குபற்றும் சவாரிப் போட்டி நடைபெற உள்ளதால் சவாரிப் பிரியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்: 12~06~2005 ஞாயிறு பி.ப. 2.00 மணி
இடம்: நீர்வேலி சவாரித்திடல்

சிவன் விளையாட்டுக்கழகம்,
புத்தூர்.

(36378)(46-14-45-26)



## பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல பார்மஸி, கிளினிக் என்பவற்றுக்குப் பின்வரும் பணிநிலைகளுக்குப் பணியாளர் தேவைப்படுகின்றனர்.

1) கணக்காளர்
2) கணக்குப் பதிவாளர் (பெண்)
3) கணனி இயக்குநர்
4) சிட்டை பரிசோதகர்

மேற்படி பணிநிலைக்குத் தகுதியும் முன் அனுபவமும் உள்ளவர்கள் 13-06-2005 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும் நேர்முகத் தேர்வுக்குச் சமுகந்தரவும்.

தேர்வு நடைபெறும் இடம்:
**சன்றைஸ் மெடிக் கிளினிக்**
முதலாம் மாடி, 388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(36387)(26-14-45)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்

மலர்வு 05 - 02 - 1928



உதிர்வு 11 - 05 - 2005

**திருமதி சிவசுப்பிரமணியம் பூமணி**

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10-06-2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மஞ்சத்தடி,
இணுவில். (36379) (24-14-45-26) **- குடும்பத்தினர்.**

# திரு அழகு நிலையம்





அழகுக்கலை சம்பந்தப்பட்ட
அனைத்துப் பயிற்சி வகுப்புகளும்
இன்று (10.06.2005)
வெள்ளிக்கிழமை
ஆரம்பம்.

கொழும்பில் கூடிய கட்டணத்துடன் பயிலும்
பயிற்சிநெறிகளைக் குறைந்த கட்டணத்துடன் வடமராட்சியில்
பயில ஓர் அரிய சந்தர்ப்பம்.

(36394)(29-12-16)

**செல்வி த.பாமதி**
சாமியன் அரசடி - கரவெட்டி

## யோகாசன வகுப்பு

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் பொலிகண்டி கிழக்கு கந்தவனம் கந்தசாமி கோயில் முன் மண்டபத்தில் இருபாலாருக்குமான யோகாசனப் பயிற்சி வகுப்புகளை இலவசமாக நடத்துகின்றது.

இந்த வகுப்புகள் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 11 மணிவரை நடைபெறுகின்றது. வயதுவேறுபாடின்றி எவரும் இதில் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-202)

## ஓவ் செற் மெஷின் மைண்டர் தேவை

ஓவ்செற் மெசின் (டேவிசன் மைண்டர்) கனனி ஒப்பரேற்றர், பைண்டர் ஆகியோர் உடன் தேவை. பழக விரும்புபவர்களும் நேரில் தொடர்புகொள்ளவும்.

**தயா அச்சகம்**
188, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 2881

(சி-43323)

## தவறிவிட்டது

CD 200 Honda Motor Cycle இன் திறப்புக்கோர்வை யாழ்.நகரப் பகுதியில் தவறிவிட்டது. அத்துடன் உள்ள பிளாஸ்ரிக் லேபலில் ஒரு பக்கம் 146-2075 என்ற இலக்கமும் மறுபக்கம் 021-222 2722 என்ற தொலைபேசி இலக்கமும் பொறிக்கப்பட்டுள்ளது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 178, கஸ்தூரியார் வீதி, சீற்றி வைன் ஸ்ரோர்ஸ் என்னுமிடத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (36407)(29-17-14)

## வாகனம் (VAN) வாடகைக்குத் தேவை

ஒரு பிரபல நிறுவனத்துக்கு அதன் ஊழியர்களின் பயணத் தேவைகளுக்கு 14 இருக்கைகள் கொண்ட ஒரு வாகனம் தேவைப்படுகிறது.

எமது தேவைகளுக்கேற்ப ஐந்து நாள் முன்னறிவித்தல் கொடுத்து வாகன சேவையைப் பெற்றுக்கொள்வோம்.

இந்த அடிப்படையில் வாகன உரிமையாளர்கள் தங்கள் வாகனத்தை இந்த நிறுவனத்துக்குத் தேவைப்படும்போது வாடகைக்குத் தரவிரும்பின் கீழ்வரும் விவரங்களை 17.06.2005 இற்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

(i) வாகன இலக்கம், வகை
(ii) இருக்கைகளின் எண்ணிக்கை
(iii) குளிர்சாதனம் ( A/C) உண்டோ இல்லையோ
(iv) ஒரு கிலோமீற்றருக்கு எதிர்பார்க்கப்படும் வாடகை
(V) தாமதத்துக்கான கட்டணங்கள்
ஒரு மணித்தியாலத்துக்கு -
ஒரு நாளைக்கு -

(சி/43297)

**விளம்பர இல : 2613**
**மே/பா உதயன் யாழ்ப்பாணம்.**

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு
24.10.1950

இறப்பு
12.05.2005

அமரர் தங்கவேல்
வரதலக்ஷ்மி
(மணி)

அமரர் த.வரதலக்ஷ்மி அவர்களின் 31ஆம் நாள் நிகழ்வுகள், அந்தியேட்டிக் கிரியைகள், சபிண்டிகரண நிகழ்வும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் 11.06.2005 சனிக்கிழமை காலை 5 மணிமுதல் அன்னாரது புதுக்குடியிருப்பிலுள்ள இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் அனைவரையும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*(தயவுசெய்து இதை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)*

*வரதலஷ்சுமி உணவகம்,*
*அம்மன் கோயிலடி, வல்வெட்டித்துறை.*
(36395)(29-12-16)

தகவல்:
குடும்பத்தினர்.

## இன்றைய வெளியீடு

★ வடிவேல் காமடி
★ சந்திரமுகி
★ சச்சின்

60 ரூபா

**மூர்த்தி வீடியோ**
மானிப்பாய். (சி/43321)

## "DADI" வோட்டர் பம்ப்




சென்ட் அந்தனீஸ் ஹார்ட்வெயர் (பிரைவேட்) லிமிட்டெட்
524 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி : 112324261, பெக்ஸ் 112448554
நாடெங்குமுள்ள விநியோகஸ்தர்களிடமும் கிடைக்கின்றன.

## வீடு வாடகைக்கு

யாழ்.நகரப் பகுதியில் முதலாம் குறுக்குத்தெருவில் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் வசதியான வீடு வாடகைக்குண்டு.

யாழ்.நகரப் பகுதியில் தொழில் புரியும் அரச ஊழியர் ஒருவரின் குடும்பம் விரும்பத்தக்கது. விரும்பியவர்கள் 032 2267374 அல்லது 0777 609382 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு உடன் தொடர்புகொள்ளவும்.

(36393)

## 08.06.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்




செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 200349335 இலிருந்து
200367016 வரை

சீட்டிழுப்பு இல. 1613

**44 52 54 56** சுப்பர் எண் **05**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.1,02,02,700/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,02,02,700/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 31 | 5,000/- | 1,55,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 474 | 1,000/- | 4,74,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,513 | 500/- | 7,56,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,044 | 40/- | 9,21,760/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,833 | 20/- | 4,36,660/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,27,450 | 10/- | 32,74,510/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரு. 85,18,420/-

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 1,02,02,700/-

200365302-4-26
200351940-0-87
200354266-8-92
200357114-6-85
200362397-2-16

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 3.

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்




58 ஆவது நாளாக
ரஜினி, நயன்தாரா, பிரபு,
ஜோதிகா, வடிவேல், நாசர்
நடித்த

காட்சிகள:
11.00, 3.00, 7.00 (பி.நே.)

கடைசிவாரமாக
13 ஆம் திகதி முதல்
**ஜித்தன்**

## ராஜா யாழ்ப்பாணம்

புதிய வெளியீடு
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி, லக்ஷ்மி,
சுஜாதா, நிழல்கள்ரவி நடித்த

**சூர்யா** (சீல்ஸ்)
ஆக்ஷன் படம்.

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)

## நாதன்ஸ் சினிமா

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம்,
ஸமிக்சா மற்றும் பலர் நடித்த

**அறிந்தும் அறியாமலும்**

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பி.நே.)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவசுப்பிரமணியம் அன்னபூரணம் (குப்பிழான்)



குப்பிழானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் அன்னபூரணம் அவர்கள் நேற்று (09.06.2005) வியாழக்கிழமை காலை 5 மணியளவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் (கிளாக்கர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வீரகத்தி - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் நடராஜா (கனடா, ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்), கனகரட்ணம் (பொறியியலாளர் - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேசலிங்கம் (பொறியியலாளர் - கனடா), சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் (உதவிப் பணிப்பாளர் - இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு - யாழ்ப்பாணம்), சிவமுத்துலிங்கம் (கனடா), சிவஜோதிலிங்கம் (சட்டத்தரணி, ஆசிரியர் நல்லாயன் கன்னியர்மடம் - கொட்டாஞ்சேனை), பஞ்சலிங்கம் (B.com., கனடா), சந்திரவதனா, இந்திரவதனா ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற சுலோசனா, கிருபாநிதி, சாந்தா, பத்மினி, ஈஸ்வரி, மாலினி (கட்டட நிர்மாணி - T.O.), செல்வநாயகம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - நில அளவைத் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காண்டீபன் (பொறியியலாளர் Canada), பிரதீபன் (பொறியியலாளர் - India), அஜந்தா (பொறியியலாளர் Canada), Dr.அரவிந்தன் (யாழ். போதனா வைத்தியசாலை), அறிவழகன் (மாணவன் - human Biology - லண்டன்), அன்பரசன், அருளினியன், அழகரசன் (மாணவர்கள் - யாழ்.இந்துக் கல்லூரி), கலைஞானன் (Canada), கலைவாணி (Canada), கலைச்செல்வி (Canada) தமிழினி (மாணவி - பேராதனைப் பல்கலைக்கழகம்), யாழினி (மாணவி - நல்லாயன் கன்னியர்மடம், யாழ்ப்பாணம்), கௌதமன் (மாணவன் - கொழும்பு) சங்கிதா (Canada), கபிலன் (Canada), சஞ்ஜீவன், காயத்திரி (மாணவி - விவசாய பீடம் - யாழ்ப்பாணம்), இரஜிவன் (மாணவன் - கொழும்பு), சுஜீபன், கிரிசாந், ரவிசாந் (மாணவர்கள் - யாழ். வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), சசிகாந் (மாணவன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் Dr.திருமதி நாரணி அரவிந்தன், திருமதி சுதர்சினி சஞ்சீவன், திருமதி ஸ்ரீத்தி பிரதீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் குப்பிழான் காடாகரம்பை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'இந்திரபவனம்',*
*குப்பிழான் தெற்கு,*
*குப்பிழான்.*
(36405)(29-12-16)

தகவல்:
குடும்பத்தினர்.

## செல்வராசா சிவகுமார்



நந்தாவில், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா சிவகுமார் அவர்கள் நேற்று (09.06.2005) வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராசா (சின்னண்ணை) - சரஸ்வதி தம்பதிகளின் அருமை மகனும் செல்வகுமாரி (லண்டன்), ஜெயகுமாரி, விஜயகுமாரி (லண்டன்), உதயகுமாரி, இரத்தினகுமார் (பிரான்ஸ்), றாஜி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகேந்திரநாதன் (லண்டன்), சிவலிங்கம், ஜெயக்குமாரன் (லண்டன்), கோபாலகிருஷ்ணன், வத்சலா (பிரான்ஸ்), கேசவன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நந்தாவில்,*
*கொக்குவில்.*
(சி-43322)(29-12-16)

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு



அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் வைகாசி மாதம் 27ஆம் நாள் (2005-06-10) வெள்ளிக்கிழமை காலை 09.05 மணிமுதல் 10.06 மணிவரையுள்ள புநர்பூச நட்சத்திரமும் சித்தியோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கவுள்ள



# கரன் ஜுவலர்ஸ்

எனும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த எண்ணியுள்ளோம். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்புபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பருத்தித்துறை வீதி,*
*இருபாலைச் சந்தி, கோப்பாய்.*

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:*
**S.ஐங்கரன்** (36400)(29-12-16) **T.P: 0779059520**

## அரச அச்சகத்தின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு பேஸ்லைன் வீதியில் அமைந்துள்ள அரச அச்சகப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் நேற்றிரவு பலப்படுத்தப்பட்டிருந்தன.

அரச அச்சகத்துக்குப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பது தொடர்பாகக் கொழும்பு செய்தி வட்டாரங்களில் பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன.

நாடாளுமன்றைக் கலைக்கும் பிரகடனம் அல்லது வேறு முக்கிய தீர்மானங்களை ஜனாதிபதி மேற்கொள்ளக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் அங்கு நிலவியது. (ஐ)

## ஜே.வி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் ஜனாதிபதி சந்திரிகா உறுதியாக இருக்கிறார். எமது கட்சி இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குகிறது. அரசின் பங்காளிகளாக இருக்கும் ஜே.வி.பியினர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என்றாலும் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் தனது முயற்சியை ஜனாதிபதி கைவிடப் போவதில்லை.

ஏனெனில், ஜே.வி.பியினரில் 8பேர் கடந்த வாரம்வரை பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்தனர். இப்போது சுமார் 12 பேர் எமது இந்த முயற்சியை ஆதரிக்கின்றனர். இதுதொடர்பில் அவர்களுடன் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. உரியவேளை வரும்போது ஜனாதிபதி அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வார்.

-இவ்வாறு அமைச்சர் மேலும் கூறினார். (ஐ-க)

## பௌத்த அதியுயர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி தலதாமாளிகைப் பகுதியில் ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண. ஓமல்பே சோபித்த தேரர் பொதுக்கட்டமைப்பை எதிர்த்து சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வரும் நிலையில் பௌத்தமத உயர் பீடங்களின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நான்கு மகாநாயக்கர்களாலும் ஜனாதிபதிக்கு அனுப்பட்டுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட அனைத்து இனமக்களினதும் நன்மை கருதி மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளினதும் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.

வடக்கு - கிழக்கு உட்பட தெற்கிலும், மேற்கிலும் வாழும் கரையோர மக்கள் இந்தப் பேரலையால் பாதிக்கப்பட்டு உயிர்களையும், உடைமைகளையும் இழந்து ஐந்து மாதங்களாகின்றன. இவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட இருக்கும் வேலைத்திட்டத்திற்கு ஆகக்குறைந்தது நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தையாவது பெற வேண்டும். பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அது கூட இடம்பெறவில்லை. அரசியல் கட்சிகளுடன் இது விடயமாகக் கலந்தாலோசிக்கப்படவில்லை.

பயங்கரவாத, பிரிவினைவாத புலிகளுடன் இணைந்து அரசு பொதுக்கட்டமைப்பு ஒன்றை நடைமுறைப்படுத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அனைத்துக் கட்சிகளும் அங்கம் வகிக்கும் கட்டமைப்பு ஒன்றின் மூலமே இவ்வாறான புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவேண்டும். பொதுக்கட்டமைப்பை எதிர்த்து சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வரும் வண. ஓமல்பே சோபித்த தேரரின் உடல் நிலை மோசமாகி வருகின்றது. நாட்டின் தலைவி என்ற வகையில் இந்த விடயத்தில் தலையிட்டு அறிவித்தல் ஒன்றை விடுக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம். இதற்கு இணங்காது போயின் மூன்று நிக்காயங்களையும் சேர்ந்த பௌத்த பிக்குமார்களை ஓரிடத்துக்கு அழைத்து மக்களுக்கு யதார்த்தத்தைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கையில் இறங்குவோம்.

வவுனியா, திருகோணமலை, கிழக்குப் பிரதேசம் உட்பட நாட்டின் சில பகுதிகளில் புத்தர் சிலைகளுக்குப் புலிகளினால் ஏற்படுத்தப்பட்டு வரும் இடைஞ்சல்களையும் கண்டிக்கின்றோம். இத்தகைய செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த உடனடியான நடவடிக்கையில் இறங்குமாறு உங்களை வினயமாகக் கேட்டுகொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க)

## திலீபன் போன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்குமாரின் உண்ணாவிரதத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் விரைவில் எழும்பிப் போய்விடுவார்கள். உண்ணாவிரதமிருந்து இலங்கையில் உயிர்நீத்தவர்கள் யார்? சில குறிக்கோள்களுக்காக கடைசிவரை உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தவர் திலீபன் மட்டும் தான். உண்மையில் அவரின் குறிக்கோள், இலட்சியம் என்ன என்பது குறித்து எனக்கு முழுமையாக எதுவும் தெரியாது. ஆனால், இறுதி வரை அவர் தனது இலட்சியத்தில் உறுதியாக இருந்தார். வேறு யாரையும் நாம் அப்படிக் கூறிவிட முடியாது. எவ்வாறாயினும் நமது பிக்குமாரும் அவ்வாறான இலட்சியத்துடன் இருப்பார்களென நம்புகின்றேன். அப்படி இருந்தால்தான் இவர்களின் பெயர்களை வரலாற்றில் பதிவு செய்யலாம். (ஐ-க)

## பொதுக்கட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டங்கியிருக்கும் விடயங்கள் என்ன என்பது ஜனாதிபதியைத் தவிர எவருக்கும் தெரியாது.

இதில் உள்ள விடயங்கள் பற்றி எமக்கு மிகவும் தெளிவான முறையில் தெரிவிக்குமாறு நாம் ஜனாதிபதியிடம் கேட்டிருந்தோம். இது தொடர்பான கடிதம் ஒன்றை எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார். இதற்கு எவ்வித பதிலும் தெரிவிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை ஜனாதிபதி எதிர்பார்ப்பது தவறு.

இப்போதும் நாம் ஜனாதிபதியைக் கேட்கின்றோம். பொதுக்கட்டமைப்பில் அடங்கியுள்ள விடயங்களை எமக்குத் தெரியப்படுத்துங்கள் என்று கோருகின்றோம். அதன்பின் எமது நிலைப்பாட்டை நாம் வெளியிடுவோம்.

பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திட்டால் அரசைவிட்டு விலகி விடுவோம் என ஜே.வி.பியினர் கூறியிருக்கின்றனர். அவ்வாறு அவர்கள் விலகும் பட்சத்தில் அரசுக்கு எமது ஆதரவை வழங்குவதா, இல்லையா என்றதீர்மானத்திற்கு நாம் வரவேண்டியிருக்கும். பொதுக்கட்டமைப்பிலுள்ள விடயங்களை எம்மிடம்தெரிவிக்கப்பட்ட பின்பே அது தொடர்பான தீர்மானத்திற்கும்நாம்வருவோம் - எனக் கூறினார். (ஐ-க)

## சோபித தேரரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணத்தினால் உடனடியாக அவர் வைத்திய சாலையில் சேர்க்கப்படவேண்டுமென்றும் கூறினார். இதேவேளை, தம்மால் வைத்தியசாலைக்குச் சென்று தங்க முடியாததென்று வண.ஓமல்பே சோபித தேரர் கூறியிருக்கின்றார். (ஐ-க)

## பிக்கு எம்.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர். இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண.கொட்டபொல அமரகீர்த்தி தேரர் கூறியதாவது:-

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வண.ஓமல்பே சோபித தேரரின் உடல்நிலை மோசமடைந்துள்ளது. அவர் தனது சுயநினைவைப் படிப்படியாக இழந்து வருகிறார். இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு வெகுவாகக் குறைந்துள்ளதால் அவரை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லுமாறு மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனால், வண. ஓமல்பே சோபித தேரர் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அரசு பொதுக்கட்டமைப்புத் தொடர்பான தனது நிலைப்பாட்டை அடுத்த 24 மணி நேரத்திற்குள் அறிவிக்கவேண்டும். அவ்வாறில்லாத பட்சத்தில் பௌத்த பிக்குமார் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பார்கள் - இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ-க)

## ஜே.வி.பியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சிக்கலான சூழ்நிலை குறித்து ஜனாதிபதியுடன் தாம் தனிப்பட்ட முறையில் பேசவிருக்கிறார் என அங்கு குறிப்பிட்ட பிரதமர், அதுவரை பொறுமைகாக்குமாறு ஜே.வி.பியிடம் வேண்டுகோள் விடுத்தார். ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்க, பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோர் இந்தச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (ஐ-க)


IBMS

ONLINE CLASS

Certificate in Office Application

Starts on 12.06.2005 at 10 a.m.

Duration: one Month

பாடசாலை மாணவர்களின் விடுமுறைக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கைநெறி

தலைமை அலுவலகம்: # 410, K.K.S. Road, Jaffna.

கிளை நிறுவனங்கள்:
○ NMMV Road, Nelliady.
○ Sangaththanai, Chavakachcheri

புதிய யூனிவேசல் அக்கடமி

A/L 2007 புதிய பிரிவு

இந்துநாகரிகம் S.ஜெயக்குமார்

ஆரம்பம்: 11.06.2005 (சனி)
சனி, ஞாயிறு 1.30 p.m.

A/L 2006 மீட்டல் வினா, விடை வகுப்பு
ஆரம்பம்:11.06.2005 (சனி)
சனி, ஞாயிறு- 12.30 P.m.

(36336)



UNIT

எமது வாடிக்கையாளர்களது வேண்டுகோள் ஏற்கப்பட்டுள்ளது

மீண்டும் UNITன் UNIQUE Offer

எல்லா கணனி உதிரிகளும் குறைக்கப்பட்ட விலையில்

நாங்கள் வழங்கும் ஒவ்வொரு கணனியுடனும்

TV Tuner/Webcam/Woofer/UPS/Table Printer/Scanner & CD Cleaner, Screen Filter, Dust Cover, Mouse Pad Totally Free

3 வருட முழு உத்தரவாதம்

நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே

UNIT 347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021 - 4590720 / 0773134737



D.C.S. நியூட்டன் ஆரியகுளம் சந்தி அருகில், யாழ்நகர்.

A/L 2006, 2007 (கலைப்பிரிவு)

| | |
|---|---|
| Tam. - M.சுரேஸ் | Dra. - I.சத்தியா |
| Chr. - S.ரங்கன் | H.C. - S.சுரேஸ் |
| Po.Sc. - T.திருமுருகன் | Hi. - S.பத்மன் |
| Eng. - R.மகேஸ்வரன் | Geo - S.கிருஷ்னா |

ஆரம்பம்: 11.06.2005 சனி, ஞாயிறு காலை 8 மணி

G.A.Q., B.A. Part -I,II யாழ்.பேராதனை விரிவுரைகள் நடைபெறுகின்றன.

Branch திகழ் கல்வி நிறுவனம், கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

(36367)



IIS

HND

புதிய பிரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

Higher National Diploma கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் உங்கள் பதிவுகளிற்கு முந்திக்கொள்ளுங்கள். மேலதிக விபரங்களிற்கு

இயக்குநர்
IIS CITY CAMPUS
#181, Navalar Road.
Jaffna.
☎ 2228060


## மரண அறிவித்தல்கள்

### வைரமுத்து கணபதிப்பிள்ளை

(Retd. R.M.P. பாணாவெட்டி வைத்தியசாலை)

சுழிபுரம் மேற்கைப்பிறப்பிடமாகக் கொண்ட வைரமுத்து கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (09.06.2005) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் வைரமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, பொன்னம்மா, வைரவநாதன், பொன்னையா, மற்றும் இராசம்மா, காலஞ்சென்ற முத்தாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவராஜா (ஓய்வுபெற்ற இரசாயன பகுப்பாய்வாளர், கொழும்பு), திருமதி பத்மாவதி ஜெகதீசன்(கனடா), திருமதி இரத்தினேஸ்வரி அருளானந்தன், சிவானந்தன், சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரன் (பிரான்ஸ்), யோகேஸ்வரன் (கனடா), தர்ஷிகா, அனுஷா, சுரேஷ்னி, அகல்யா, அம்பிகா, சிவரூபி(கனடா), நிரோசன், கண்ணன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுழிபுரம் மேற்கிலுள்ள பொ.குகானந்தன் (குமார்) அவர்களின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு

தகவல்: (சி-43324)(29-16-12)

க.சிவராஜா, (மகன்- ஓய்வு பெற்ற அரச இரசாயன பகுப்பாய்வாளர்).

### திருமதி கதிரேசபிள்ளை அரசம்மா



சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரேசபிள்ளை அரசம்மா அவர்கள் நேற்று (09.06.2005) வியாழக்கிழமை அன்று மாலை சிவபதமடைந்துவி[illegible]ார்.

அன்னார் கதிரேசபிள்ளையின் அன்பு மனைவியும் தங்கராஜா (இலங்கை வங்கி -சாவகச்சேரி), தங்கராணி (மட்டுவில்), சுந்தரலிங்கம் (இத்தாலி), சுவீந்திரராஜா (கனடா), சிவகோசலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கெங்காதேவி, நடராஜா (மட்டுவில்), ரஞ்சினி (இத்தாலி), திலகவதி (கனடா), வாமதேவன் (ஜேர்மனி) ஆகியோரது மாமியாரும் மோகனதாஸ் (லண்டன்), கிரிதாஸ்,பிரதீபா (2005 கலைப்பிரிவு, சாவ.இந்துக் கல்லூரி), கீர்த்தனா (விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) யஸ்மினா (2004 வர்த்தக பிரிவு, சாவ.இந்துக் கல்லூரி), தனுஷன் (2007 கலைப்பிரிவு, சாவ.இந்துக் கல்லூரி), நிருசன் (சாவ.இந்துக் கல்லூரி), தினுசன் (கனடா), மயூரன் (கனடா), அகல்யா (இத்தாலி), அனோஜன் (இத்தாலி) ஆகியோரது ஆசைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2005) அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் வேம்பிராய் இந்துமயானத்தில் அடக்கஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(சி-43324)(29-16-12)

வா.கதிரேசபிள்ளை (கணவர்- கல்வயல் வேதவன விநாயகர் ஆலய தர்மகர்த்தா)

க.தங்கராஜா (மகன் - இலங்கை வங்கி , சாவகச்சேரி).


தென்னிந்தியாவில் இருந்து

ஏழாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்



ராஜகுருசாமி அவர்கள்

வியாழமாற்றம், சனிமாற்றப் பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ்.மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வருகை தந்துள்ளார்.

பார்க்கும் நேரம்: காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரை. கைரேகை மட்டும் 9 மணிமுதல் ஒரு மணிவரை.

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம் ★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்

இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

ராஜகுருசாமி மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ் (38-16-18)
60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.
(சி-43324)



EXPOAir your friend in the skies...

எக்ஸ்போ எயார் வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.